ISSN 1391-9504

Vijey விජය

# விஜய்

17.04.2013 - மலர் 10, இதழ் 07



## விண்வெளி வீரன்:

# யூரி ககாரினின் வாழ்க்கைச் சுவடுகள்!




PUBLIC LIBRA
JAFFNA.

விலை ரூபா 15/-



## இலங்கையின் நீர்வீழ்ச்சிகள்



## பூமியதிர்வினால் நீர் தங்கமாகின்றது!

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கண்டியில் ஏற்பட்ட படுதோல்வி

# 'மாமன்னன் பண்டாரவன்னியன்'

09

அரியாலையூர் சி.சிவதாசன்



தேசாதிபதி நோர்த்தையும், கெப்டன் றிபேக்கையும் நோக்கிய தூதுவன் "மதிப்புக்குரிய தேசாதிபதி அவர்களே! கண்டியில் எமது படையினருக்கு படுதோல்வி ஏற்பட்டுள்ளது" எனக் கூறினான். இது கேட்ட தேசாதிபதி நோர்த்தின் கண்கள் சிவந்தன. "எப்படிப் படுதோல்வி ஏற்பட்டது. எமது பீரங்கிப் படைகள் என்ன செய்தன. கண்டியரசனின் கோட்டையை ஏன் எமது படையினர் தகர்த்தெறியவில்லை" என கோபத்துடன் கேட்டான். அதற்குத் தூதுவன், "பிரபு! கண்டி இராச்சியத்தை நேரடியாகத் தாக்குவதற்கு இயற்கை பெருந் தடையாக இருக்கிறது. உயர்ந்து நிற்கும் மலைகளைக் கவசமாக வைத்து தாக்குதலை நடத்துகிறான் கண்டியரசன். எமது பீரங்கிப் படைகள் மலைகளுக்கூடாக முன்னேற முடியவில்லை. மேலும் கண்டிப் பிரதேசம் கடும் குளிர் கொண்டது. அந்நிலை அறியாத எமது படையினர் மிகப் பெரும் பின்னடைவை அங்கு எதிர்நோக்கியுள்ளார்கள். கடுங்குளிரைப் பெரிதெனக் கருதாத கண்டியரசனின் படைகள் மலைகளில் மறைந்திருந்து எமது படைகளை முன்னோக்கி செல்ல முடியாதவாறு தடுத்து பெருந் தாக்குதலை நடத்தியுள்ளன. அதன் காரணமாக, பெரும் சேதத்துடன் எம் படைகள் பின்வாங்கிவிட்டன. இதுவே தோல்விக்கான காரணம்" என்றான் தூதுவன்.

"தேசாதிபதி அவர்களே! எமது படைகள் இலங்கைத் தீவின் பல பகுதிகளைக் கைப்பற்றிவிட்டன. யாழ்ப்பாணத்தையும், கொழும்பு கோட்டை இராச்சியமும் எம்வசமே உள்ளன. இவ்வாறு பல பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் எம்மால் வன்னியையும் கண்டி அரசையும் முழுமையாகக் கைப்பற்ற முடியவில்லை. பண்டாரவன்னியன் கண்டியரசனுக்கு படை உதவி செய்திருக்கிறான். முதலில் பண்டாரவன்னியனை எப்படியும் நாம் தோற்கடிக்க வேண்டும். அதற்கு ஆயுதபலம் மட்டும் போதாது. தந்திரத்தையும் பிரயோகிக்க வேண்டும். வன்னியின் சிற்றரசுகள் சில எமது பக்கமுள்ளன. கரிக்கட்டு மூலையின் சிற்றரசன் கதிர்காம நாயக முதலியார் எமக்கு அடிக்கடி பண்டாரவன்னியன் பற்றிய தகவல்களை வழங்கி வருகிறான். அவனை வைத்தே பண்டாரவன்னியனை நான் தோற்கடிப்பேன். அதுவரை எனக்கு கால அவகாசம் வழங்குங்கள்" என்றான் கெப்டன் றிபேக்.

அதற்கு தேசாதிபதி நோர்த், "உங்களின் யோசனையை நான் வரவேற்கிறேன். அந்தப் பண்டாரவன்னியனை எப்படியாவது அடிபணிய வைக்க வேண்டும்.அவனைச் சிறைப்பிடிக்க வேண்டும் அல்லது அழித்துவிடவேண்டும். அப்பொழுது தான் இலங்கை முழுவதும் எம் ஆதிக்கத்தைத் திறம்பட நடத்த முடியும். நாம் இலங்கைத் தீவுக்கு வந்த முழு நோக்கத்தையும் நிறைவேற்ற முடியும். அதனை நீங்களே முன்னின்று நிறைவேற்ற வேண்டும்" என்று கட்டளையிட்டான். ஆங்கிலேயர்கள் இலங்கைத் தீவை ஒல்லாந்தர்களிடம் இருந்து கைப்பற்றியபோது, ஒல்லாந்தர்கள் சிலர் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார்கள். இலங்கைத் தீவுக்குப் புதியவர்களான ஆங்கிலேயருக்கு இந்த ஒல்லாந்தர் உதவி தேவைப்பட்டது. சிறந்த போர் வீரனாகவும், போரின்போது படைகளை வழிநடத்துவதில் வல்லவனாகவும் விளங்கிய கெப்டன் றிபேக் ஆங்கில நிர்வாகத்திற்கு நல்ல விசுவாசியாக இருந்தான். முல்லைத்தீவுக் கோட்டையிலிருந்து பண்டாரவன்னியனால் தோற்கடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு தப்பியோடிய கெப்டன் றிபேக் பண்டாரவன்னியனை தோற்கடிப்பதிலேயே குறியாக இருந்தான். தேசாதிபதி நோர்த்திடம் இருந்து விடைபெற்ற கெப்டன் றிபேக் யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டான்.

முல்லைத்தீவில் தமது ஆங்கிலேய நிர்வாகத்திற்கு ஏற்பட்ட அவமானத்தை தாங்க முடியாத தேசாதிபதி நோர்த் திருகோணமலையிலிருந்து கெப்டன் எட்வட் தலைமையில் யாழ்ப்பாண நிர்வாகத்திற்குத் அறிவிக்காமல் ஒரு படைப்பிரிவை முல்லைத்தீவினை நோக்கி அனுப்பினான். இது பண்டாரவன்னியனுக்கும் தெரிந்திருக்கவில்லை. இதனால், கெப்டன் எட்வட் மெட்சின் மிகச் சுலபமாக முல்லைத்தீவைக் கைப்பற்றினான். (தொடரும்)

விஜய் Bookvin கிழக்கு

இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

**நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ரூபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.**

**✱ ஆகாயக்கற்கள் கீழே விழும்போது ஏன் ஒளிர்கின்றன?**

***எம்.பி.சஃபானா, முத்துவ மாவத்தை, இரத்தினபுரி.***

எமது சூரிய மண்டல கோள்களின் உபகோள்களைப் போலவே, அளவில் மிகச் சிறிய விண்கற்களும் சூரியனைச் சுற்றி ஒரு வளையப்பாதையில் வலம் வருகின்றன. ஆனால், அவை ஏதோ ஒரு காரணத்தால் தமக்குரிய பாதையை விட்டு விலகும்போது, பூமியினுள் நுழையும் (ஈர்ப்பு விசையால்) வாய்ப்பு இருக்கிறது. பொதுவாக 42km/sec வேகத்தில் பயணிக்கும் இவை, பூமியின் வளிமண்டல மேற்பரப்பை அடைகையில் 72km/sec வேகத்தைப் பெறுகின்றன.



இத்தகைய வேகமும், வளிமண்டல உராய்வும் சேர்ந்து, அக்கற்களை தீப்பிடித்து எரியச் செய்கின்றன. இதுவே எமக்கு ஒளிர்வது போன்று தெரிகிறது. இவ்வாறான பல விண்கற்கள் புவியின் மேற்பரப்பை அடையும் முன்பே எரிந்து அழிவடைந்து விடுகின்றன. ஒரு சில கற்களே அரிதாக பூமியின் மேற்பரப்பை வந்தடைகின்றன.

**✱ கழுத்துப்பட்டி (Tie) அணியும் வழக்கம் எவ்வாறு உருவானது?**

***ஜே.எம்.பாரிஜ், கண்டி வீதி, திஹாரிய.***

மிகத் துல்லியமாக இதன் ஆரம்பத்தைக் கண்டறிவது கடினமானது. எனினும், பண்டைய கால சீன மற்றும் ரோமானிய போர் வீரர்கள், இன்று நாம் காணும் கழுத்துப் பட்டியின் வடிவத்தை ஓரளவு ஒத்த அணிகலனை அணிந்திருந்ததாக இலக்கியங்களும், ஓவியங்களும் தெரிவிக்கின்றன.



ஆனால், 1618-1648 வரை நடைபெற்ற 30 ஆண்டு யுத்தத்தின் பின்னர்தான் 'Cravat' (கழுத்துப்பட்டி என்பது இதன் பொருள்) எனப்பட்ட, இன்றைய Tie இன் மூல வடிவம் பிரபலமடையத் தொடங்கியது. குரோஷியர்கள் இதனை தொடங்கி வைத்ததன் பின்னர் ஐரோப்பா எங்கும் இப்பழக்கம் பரவியதாகவும் கூறப்படுகின்றது.

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.



விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk




# பூமியதிர்வினால் நீர் தங்கமாக மாறுகின்றது....!

## குயின்ஸ்லாந்து பல்கலைக்கழக புவியியலாளர்கள் குழு தெரிவிப்பு

'தங்கம்' என்பது, பெறுமதி மிக்க ஓர் உலோகம் ஆகும். நிலத்தின் அடியில் இருந்து இது கிடைக்கின்றது. உலகிலேயே மிகப் பெரிய தங்கச் சுரங்கம் இந்தோனேஷியாவின் பப்புவா மாகாணத்தில் அமைந்துள்ளது. அதனை 'க்ராஸ்பர்க் சுரங்கம்' என அழைக்கின்றனர். உலகில் விலை மதிப்புக்கூடிய உலோகங்களில் ஒன்றான இந்த தங்கம் குறித்து அண்மையில் ஆச்சரியமானதொரு தகவல் வெளியாகியுள்ளது. அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் புவியியலாளர் குழுவே இது குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு பல





தகவல்களை வெளியிட்டுள்ளது. அதாவது, பூமியதிர்வின் காரணமாகவே, தங்கம் உற்பத்தியாகின்றது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### பூமி அதிர்வும் தங்க உற்பத்தியும்

பூமியின் தரை உட்பகுதி சீயல் படை, சீமாப்படை, கோளவகம் எனும் மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். இதில் சீமாப்படையில் உள்ள பாறைப் படைத்தட்டுகள் ஒன்றோடொன்று மோதுவதாலேயே பூமியதிர்வு (பூமியதிர்ச்சி) ஏற்படுகின்றது. அத்தகைய மோதலால் ஏற்படும் மிகப்பெரிய பூமியதிர்ச்சியின்போது, பூமி பிளவுபட்டு பெரும் அதலபாதாளம் ஏற்படும்.



பெறுமதிமிகு தங்கம் உற்பத்தியாவது இந்த பாதாளத்தினுள்தானாம்! பல தங்கச் சுரங்கங்களை அவதானித்து- ஆராய்ந்ததை அடுத்தே இக்குழுவினர் இந்த விடயத்தைக் கண்டறிந்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் விளக்கமளிக்கும் போது; பூமியதிர்ச்சியால் ஏற்படும் பாதாளத்தினுள்ளே சின்னஞ்சிறிய உடைப்புகளும் வெடிப்புகளும் அதிகளவில் ஏற்படும். இந்த வெடிப்புகளுக்குள் நீர் பாய்ந்து நிரம்பும். புவியின் மேற்பரப்பில் இருந்து 6 மைல் ஆழத்தில் வெப்பமானது, அதிக அளவில் காணப்படும். அத்துடன், அந்த நீர் மிகுந்த அழுத்தத்திற்கும் உட்பட்டிருக்கும். இதன்போது, இந்த நீரானது காபனீரொட்சைட், சிலிகா போன்ற மூலக்கூறுகளையும் தங்கம் போன்ற மூலப்பொருட்களையும் கொண்டிருக்கும்.

பூமியதிர்ச்சியால் ஏற்படும் வெடிப்பு ஒரேயடியாக அகலமாக விரிவடையும் பொழுது நிலத்திற்கு உள்ளே இருக்கும் இந்த நீரானது, ஒரேயடியாக நீராவியாக மாறும். அப்பொழுது நிகழும் ரசாயன செயற்பாடுகளின் பின்னர் தங்கம் படிப்படியாக உற்பத்தியாகி அருகிலுள்ள மேற்பரப்பில் நிலையாகப் படியத் தொடங்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனினும், தங்கம் உற்பத்தியாவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரே காரணியாக பூமியதிர்ச்சி திகழவில்லை. பூமியதிர்ச்சியின் பின் உருவாகும் தங்கத்தின் அளவு மிகவும் சொற்பமாகும். அவ்வாறு உருவாவதற்கு நீண்டகாலம் எடுக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், ரிச்டர் அளவினைக்கொண்ட பூமியதிர்ச்சியின்போது, ஏற்படும் பிளவுகளினாலும் இவ்வாறு தங்கம் உற்பத்தியாவதற்கான வாய்ப்புகள் உள்ளன என ஆய்வுக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

**இரஞ்சித் ஜெயகர்**

### சைக்கிள் வெற்றியாளர்



'விஜய்' யின் சைக்கிள் வெற்றியாளர்களுள் ஒருவரான காரைதீவு-05ஐச் சேர்ந்த சதாசிவம் கஜந்தன், தனக்குரிய சைக்கிளுடன் காணப்படுகின்றார்.

### வாசகர் முகம்



இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
என். அஹமட் இர்ஷாத்,
பேருவளை.

DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
பெயர் ,முகவரியைக் குறிப்பிட்டு 0773- 123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....



12

பன்-பாலா

## ஆய்வுகூட அதிசயங்கள்!

இதுவரை.....

நாளைக்கு எங்களுடைய ஆய்வுகூடத்துக்குக் கூட்டிக் கொண்டு போகிறேன். வந்து பாருங்கள் என்னென்ன அதிசயமெல்லாம் இருக்கிறது என்று இராமபுத்திரன் கூறியதைக் கேட்ட சிறுவர்கள் மிகவும் உற்சாகத்துடன் காத்திருந்தார்கள். ஆனால், அங்கே அதிசயங்கள் மட்டுமல்ல.... ஆபத்துக்களும் காத்திருக்கின்றன என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இனி....

மறுநாள் உற்சாகமான பொழுதாக மலர்ந்தது. முதல்நாள் கூறியதுபோலவே இராமபுத்திரன் வந்தார். தயாராக இருந்த வாகனத்தில் அனைவரும் ஏறிக்கொண்டார்கள். வழமைபோல ரொபோ சாரதி. வாகனம் ஊர்வது போலவும் காற்றில் பறப்பது போலவும் சென்றது. கூம்பு வடிவில் அமைக்கப்பட்டிருந்த ஒரு நிலையத்துக்கூடாக அது நுழைந்து தவழ்ந்தது.

''இதோ பாருங்கள்! இதுதான் 'க்ரீன் ஹவுஸ்'. இங்கே செயற்கை முறையில் தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. இதை இழைய வளர்ப்பு முறை என்பார்கள். இதன்மூலம் பெறப்படும் தானியங்களை நாங்கள் உணவுக்காகப் பயன்படுத்துகின்றோம்'' என்று விளக்கினார் விஞ்ஞானி இராமபுத்திரன்.

நீண்டநேரத்தின் பின்னர் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டிருந்த கட்டடத்தின் முன்னால் வாகனம் நின்றது. கண்ணாடி எது, சுவர் எது என்று கண்டுபிடிக்க முடியாதபடி நிர்மாணிக்கப்பட்டிருந்தது அந்தக் கட்டடம்.

''இதுதான் எமது ஆய்வுகூடம். உலகத்தையே ஆட்டிப் படைக்கப் போகின்ற ஆராய்ச்சிகளை இங்கேதான் ஆரம்பித்திருக்கிறோம். இயற்கைக்கும் செயற்கைக்கும் இடையில் ஒரு பலப்பரீட்சை இங்கே நடந்துகொண்டிருக்கிறது'' என்று கூறியபடியே முன்னால் நடந்தார் இராமபுத்திரன். சுவரில் பொருத்தப்பட்டிருந்த ஒரு விசையைத் தன் கையிலிருந்த தொலை இயக்கியால் உயிர்பெறச் செய்தார். சுவர் இரண்டாகப் பிளந்துகொண்டது. இராமபுத்திரன் வரும்படி சைகை காட்டிவிட்டு உள்ளே நுழைந்தார். சிறுவர்கள் மூவரும் தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தார்கள்.

விசாலமான கூடம். எங்கு பார்த்தாலும் விஞ்ஞானக் கருவிகள். அங்குமிங்கும் திரிந்து தமக்கு விடுக்கப்பட்டிருக்கும் கட்டளைகளை நிறைவேற்றுவதில் கருத்தாயிருக்கும் ரொபோக்கள்.


''இங்க எல்லாமே ரொபோதானா?'' என்று அஷ்வின் கேட்டான்.

''ஆமாம்! எங்களுடைய ஆராய்ச்சிக்குத் தேவையான உதவிகளை எல்லாம் ரொபோக்கள்தான் செய்கின்றன. ஏனெனில், அவை எப்போதும் சொல்வதை மட்டுமே செய்கின்றன. எங்களுக்கு அப்படியான உதவியாட்கள்தான் அவசியம்'' என்று இராமபுத்திரன் கூறிவிட்டு ஒரு கணினியிடம் போய் ஏதோ குறியீடுகளை இயக்கிவிட்டுக் காத்திருந்தார். சில நிமிடங்களில் 'உர்' றென்று ஒலி கேட்டது. தொடர்ந்து இரு சில்லுகளுடனான ஓர் இயந்திரம் வந்தது. அதில் ஏறி நின்று பயணிக்க வசதியிருந்தது.

''ம்! இதில் ஏறிக் கைப்பிடிகளைப் பிடித்துக்கொள்ளுங்கள்'' என்றார் இராமபுத்திரன்.

அவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அப்படியே செய்தார்கள். அவரும் ஏறிக்கொள்ள அந்த வாகனம் வந்த வழியே திரும்பிப் பயணித்தது. இரு புறங்களிலும் ஏராளமான அறைகள். சின்னதும் பெரியதுமான இயந்திரக் குவியல்கள். சங்கிலித் தொடர்போல இணைப்புகள். கூம்பு வடிவில், குழாய் வடிவில் ஆராய்ச்சி சாதனங்கள். புதிதான சூழல். புதுமையான அனுபவம். சிறுவர்கள் மூவரும் பரவசத்திலிருந்தார்கள்.

இயந்திரம் நின்றது. இராமபுத்திரன் இறங்கினார். சிறுவர்களையும் இறங்கச் சொன்னார். ஏராளமான கண்ணாடிப் பேழைகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ஒரு மனிதன் கிரிக்கெட் ஆடுவது போல மட்டையை உயர்த்தியபடி நின்றான்.




''இது யார்?'' என்று அவசரமாகக் கேட்டான் பிரியன்.

''இவர் ஒரு கிரிக்கெட் வீரர் இறந்து சில வருடங்களாகிவிட்டன''

''இறந்துபோயிட்டாரா? அப்படியானால் இது உயிரற்ற உடலா?'' என்று சுதன் கேட்டான்.

''ஆமாம்! இவருடைய உடலை எங்களுடைய ஆராய்ச்சிக்குப் பயன்படுத்த அனுமதி கொடுத்திருந்தார். அதனால், பழுதுபடாமல் பாதுகாத்து வைத்திருக்கிறோம்''

''வெட்டவெளியில் எந்தவொரு பாதுகாப்பும் இல்லாமல் வைத்திருக்கிறீர்களே!'' என்று சந்தேகம் வெளியிட்டான் அஷ்வின்.

''சபாஷ்! சரியான கேள்வி. இன்னும் கொஞ்சம் கிட்டப் போய் பாருங்களேன்....!''

இராமபுத்திரன் சொன்னதும் அவர்களுக்குச் சிறிது அச்சம் ஏற்பட்டது.எனினும், துணிந்து அருகில் போனபோது பயங்கர அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

அந்த உடலில் நரம்பு மண்டலங்கள் மிகத் துல்லியமாகத் தெரிந்தன. சதையும் ரத்தமுமாக உடம்பு காணப்பட்டது. குருதிக்குழாய்கள் புடைத்துப்போய் உயிரோடிருப்பது போன்று தோன்றியது. சிறுவர்கள் மூவரும் பிரமித்துப் போனார்கள்.

அவர்களது முகங்களையே சில விநாடிகள் பார்த்துக்கொண்டிருந்த இராமபுத்திரன் சொன்னார்.

''தம்பிகளே! இவ்வாறு உடல்களைப் பாதுகாக்கின்ற முறையை 'ப்ளாஸ்டினைசேஷன்' என்று சொல்வோம். மேலும், இங்கே பல உறுப்புகளைப் பாதுகாக்கிறோம். தவிர உடம்புக்குத் தேவையான பாகங்களையும் தயாரிக்கிறோம்'' என்றார்.

''என்ன? உடம்பிற்கான பாகங்களை உற்பத்தி பண்ணுகிறீர்களா?'' என்று மூவரும் ஒரே குரலில் வியப்புடன் கேட்டார்கள்.

(தொடரும்)

## விழிப்புணர்வு

புகழ்பெற்ற குரு ஒருவர் தனது சீடர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். அப்போது சீடர்களின் தலைவன் குருவைப் பார்த்து, ''குருவே, நாங்கள் எவ்வாறு விழிப்புணர்வு பெறலாம்?'' என்று கேட்டான். ''உங்களை அறிவால் நிரப்பிக்கொள்ளுங்கள்!'' என்றார் குரு.

''அறிவால் நிரப்பிக்கொள்வது என்றால் எப்படி குருவே? புரியவில்லை. சற்று விளக்கமாகச் சொல்லுங்கள்!'' என்றான் சீடன்.

''உங்களை அறிவால் நிரப்பிக் கொள்வது என்றால் பல நூறு ஓட்டைகள் கொண்ட ஒரு சல்லடையில், நீரை நிரப்புவது போன்றதாகும்!'' என்றார் குரு.

''சல்லடையில் நீரை நிரப்புவதா? அதெப்படி முடியும் குருவே?'' என்றான் சீடன்.

''முயன்று பாருங்கள் முடிகிறதா? இல்லையா? என்பதை நாளை என்னிடம் வந்து சொல்லுங்கள்!'' என்றார் குரு.

''சரி குருவே!'' என்றவாறு சென்றார்கள் சீடர்கள்.

அடுத்தநாள் சீடர்கள் ஒன்றுகூடி சல்லடையில் எவ்வாறு நீரை நிரப்பலாம் என்பது பற்றிக் கலந்து பேசத் தொடங்கினர்.

''செய்துதான் பார்ப்போமே!'' என்றனர் சீடர்கள். ஒரு பெரிய சல்லடையைக் கொண்டு வந்த ஒரு சீடன் அதில் நீரை ஊற்றினான். நீர் சல்லடை ஓட்டைகளின் வழியே சிந்தியது.

''ஹூம்! இது சாத்தியமில்லை!'' மறுபடியும் யோசித்தனர்.

''சல்லடையில் ஐஸ்கட்டியை நிரப்பலாம்!'' என்றான் ஒருவன்.

''ஆஹா! அருமையான யோசனை. அது ஓட்டைகள் வழியே வழிந்து ஓடாது. அதுவும் திட நீர்தானே!''

சல்லடையில் ஐஸ் கட்டி நிரப்பப் பட்டது.

சிறிது நேரம்தான் ஐஸ்கட்டி உருகி, ஓட்டைகள் வழியே நீராக ஓடிவிட்டது. சீடர்கள் சோர்ந்து போயினர்.

மறுநாள் குருவின் முன்னே தலை கவிழ்ந்து நின்றனர்.

''குருவே! சல்லடையில் நீரை நிரப்புவது சாத்தியமே இல்லை!'' என்றனர்.

''சல்லடையை எடுத்துக்கொண்டு என்னோடு வாருங்கள்!'' என்று கூறிவிட்டு குரு நடந்தார்.

சீடர்கள் அவர் பின்னே சென்றனர்.

சல்லடையை ஆசிரமத் தோட்டத்தில் சீடர்கள் குளிக்கும் பெரிய நீர்த் தொட்டியில் குரு போட்டார். சல்லடை நீரில் மூழ்கியது. சீட்களைப் பார்த்த குரு, ''இப்போது சல்லடையில் நீர் நிரம்பியிருக்கிறது அல்லவா?'' என்று கேட்டார்.

''ஆமாம்'' என்றனர் சீடர்கள்.

அவர்களைப் பார்த்த குரு, ''விழிப்புணர்வு பெறுவது எவ்வாறு என்று கேட்டீர்களே! விழிப்புணர் வைப் பெற வேண்டுமானால், அறிவு என்னும் கடலில் உங்களைத் தூக்கிப் போடுங்கள். அறிவு உங்களைவிட்டு விலகி ஓடிவிடாது'' என்றார். சீடர்களுக்கு குருவின் விளக்கம் தெளிவாகப் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யூரி ககாரின் பெற்றுக்கொண்ட Hero for Soviet Union பதக்கம்

# விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன்

# யூரி ககாரின்

1948 ஆம் ஆண்டு பலவிதமான விலங்குகளை விண்வெளிக்கு அனுப்பி ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள், 1961 ஆம் ஆண்டு முதன்முதலாக விண்வெளிக்கு மனிதனை அனுப்பி ஆய்வுகளை மேற்கொண்டனர். இவ்வாறு விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதனே யூரி ககாரின் ஆவார். 1934 ஆம் ஆண்டு மார்ச் 9 ஆம் திகதி பிறந்த ககாரின், விண்வெளித்துறையில் அழியாத தடமாக இருந்து வருகின்றார்.

## 1934

மார்ச் மாதம் 9 ஆம் திகதி அன்றைய சோவியத் ஒன்றியத்தின் க்லுஷினோ பிரதேசத்தில் பிறந்த ககாரின், குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை ஆவார். இவரது தந்தையார் எலக்சி இவனொவிச் ககாரின் ஆவார். தாயார் எனா டிமோபியெவ்னா ஆவார்.

## 1941



க்லுஷினோவில் உயர் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றார்.

## 1952

லுபர்ட்சியில் அமைந்துள்ள தொழில்நுட்ப பாடசாலையில் கல்வி கற்றார். அதன் பின்னர் உயர் தொழில்நுட்ப பாடசாலையில் விமானப்பயணம் குறித்து மேலதிக கல்வியைக் கற்றார்.

## 1955



ஒரென்பர்க்கில் ராணுவ விமானங்களை செலுத்துவதற்கு கற்றுக்கொண்டார்.

## 1957

வெலன்டினா கொர்ய ஷேவா என்ற பெண்ணை மணந்தார். எலீனா மற்றும் கலீனா என்ற இரு பெண் பிள்ளைகளுக்கு தந்தையானார்.



## 1957

சோவியத் விமானப்படையின் லெப்டினன்ட்டாகப் பதவி ஏற்றார். 1959 இல் சிரேஷ்ட லெப்டினன்ட் என்ற நிலைக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

## 1960



சோவியத் விண்வெளி நிகழ்ச்சித் திட்டத்திற்கென தெரிவுசெய்யப்பட்ட 20 பேரில் ஒருவரானார்.

## 1961

ஏப்ரல் 12 ஆம் திகதி விண்வெளிக்கு சென்ற முதலாவது மனிதன் என்ற பெருமையையும் புவிச் சுற்றுப்பாதைக்குச் சென்ற முதலாவது மனிதன் என்ற பெருமையையும் பெற்றார்.




## 1961

ஏப்ரல் 14 ஆம் திகதி 'சோவியத் ஒன்றியத்தின் வீரன்' என்ற பெயரைப் பெற்றார். விண்வெளி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான சோவியத் ஒன்றியத்தின் செயற்பாடுகளுக்கு ஆதரவு திரட்டும் முகமாக ஜேர்மனி, இத்தாலி, கெனடா, பிரேசில், எகிப்து ஆகிய நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டார்.





## 1962

லெப்டினன்ட் கேர்னல் என்ற பதவிக்கு நியமிக்கப்பட்டார். 1963 இல் கேர்னல் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இரண்டு ஆண்டுகளின் பின்னர், விண்வெளி வீரர்களைப் பயிற்றுவிக்கும் Star City யில் துணை பயிற்சிப் பணிப்பாளராக தெரிவு செய்யப்பட்டார்.

## 1968

மார்ச் 27 ஆம் திகதி நிகழ்ந்த மிக்-15 விமான விபத்தில் மரணமடைந்தார். அவரது அஸ்தி ரஷ்யாவின் க்ரெம்ளின் மாளிகையின் செஞ்சதுக்கத்தில் வைக்கப்பட்டது.





விண்வெளிக்குச் சென்ற முதலாவது மனிதனுக்காக, ரஷ்யாவும் ஏனைய நாடுகளும் நிர்மாணித்த நினைவுச் சிலைகள் சில....



## Vostok1

சோவியத் ஒன்றியத்தினால் தயாரிக்கப்பட்ட வொஸ்டொக் 1 விண்வெளி ஓடத்தின் உதவியுடன் யூரி ககாரின் விண்வெளிக்குச் சென்றார். 1 மணித்தியாலமும் 48 நிமிடங்களும் விண்வெளியில் தங்கியிருந்து மீண்டும் பூமிக்கு திரும்பினார். பூமியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசித்த பின்னர் பரகுட்டின் உதவியுடன் தரை இறங்கினார்.






யூரி ககாரினை நினைவு கூருமுகமாக சோவியத் ஒன்றியம் உட்பட, மேலும் பல நாடுகள் வெளியிட்ட முத்திரைகள் சில.





1961 இல் யூரி ககாரினுக்காக டைம் சஞ்சிகை தனது முதலாவது பக்கத்தை ஒதுக்கியிருந்தது.



யூரி ககாரினின் ஞாபகார்த்தமாக சோவியத் ஒன்றியமும் ரஷ்யாவும் வெளியிட்ட நாணயக் குற்றிகள் சில.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இன்றைய உலகின் சமூக நிலைமை பண்டைய காலத்தைப் போன்று இல்லை. இன்று காணப்படுகின்ற சமூக நிலைமை மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு வரலாறு கடந்து வந்த பாதையானது, மிகக் கடினமானது. அந்த ஒவ்வொரு சமூக அமைப்பு நிலையிலும் அந்தந்த காலப்பகுதிக்குரிய தன்மைகள் காணப்பட்டன. பிரத்தியேக சமூக இயல்புகள் இருந்தன. அதேபோன்று, அந்தந்த சமூகத்திற்குரிய பிரத்தியேக சமூகப்பிரிவுகளும் காணப்பட்டன. முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சமூகத்தில் இவ்வாறான நிலைமையே காணப்பட்டது. பண்டைய உலகுக்கும் நவீன உலகுக்கும் இடையிலான பாலமாக இருந்த ஐரோப்பிய மறுமலர்ச்சிக்கு வழிகோலிய காலகட்டமாக மானியமுறை நிலவிய கொத்தடிமை சமூக காலத்தைக் குறிப்பிட முடியும். இந்த மானியமுறையை 'நிலப்பிரபுத்துவ முறை' என்றும் குறிப்பிடுவர்.*



அடிமைகளின் இல்லங்கள்

# இருளில் இருந்த மானிய சமூகமுறை

## ஐரோப்பாவில் மானியமுறை சமூகத்தின் மலர்ச்சி

கிரேக்க, ரோமானிய, கிறிஸ்தவ நாகரிகங்களின் பின்னர் ஐரோப்பாவில் மானியமுறை (நிலப்பிரபுத்துவமுறை) சமூகம் உருவானது. இந்த சமூகத்தில் உழைப்பினை அடிப்படையாகக் கொண்ட நிலங்களை அனுபவிக்கும் முறை உருவானது. நாட்டில் உள்ள அனைத்து நிலங்களும் நிலச்சுவாந்தர்கள், பிரபுக்களுக்கு உரிமையாகின. நிலங்களை அனுபவிக்கும் விடயத்தில் சாதாரண மக்கள் நிலப்பிரபுக்களின் அடிமைகளாகவே சேவையாற்றப் பணிக்கப்பட்டனர்.


அடிமைகள் உழைப்பில் ஒருபகுதியை நிலப்பிரபுக்களுக்கு கொடுத்தல்

## இருண்ட யுகம்

இந்த காலப்பகுதியினை 'ஐரோப்பாவின் இருண்ட யுகம்' என்றே கூறுவார்கள். ஏனெனில், இந்த காலப்பகுதியில் புதிய படைப்புகள், கலைப்படைப்புகள், புதிய கண்டுபிடிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை. எனினும், ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்கு இந்த காலப்பகுதியே வித்திட்டது எனலாம்.

## ரோமின் வீழ்ச்சி

ரோமானியப் பேரரசின் வீழ்ச்சி மானிய சமூக முறை உருவாக்கத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது. ரோமானியப் பேரரசின் மீது பலதரப்பட்ட படையெடுப்புகள், ஆக்கிரமிப்புகள் காரணமாக, பேரரசு வீழ்ச்சி அடைந்தது. அன்றைய காலப்பகுதியில் ரோமில் ஆட்சியை மேற்கொண்டிருந்த 'சாளிமென்' பேரரசனின் மரணத்தின் பின்னர், இங்கு உள்நாட்டு யுத்தங்கள், மோதல்கள் உருவாகின. இதனால், மத்திய ஐரோப்பா பல பிரிவுகளாக பிளவுபடத் தொடங்கியது. ஸ்கென்டினேவிய பிரதேசங்களில் இருந்து வடக்கு மக்களும் கிழக்கில் இருந்து மெய்யாக்களும் தென் பகுதியில் இருந்து இஸ்லாமியர்களும் ஆக்கிரமிப்புகளை நடத்தினர்.

## பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

ரோமானியப் பேரரசில் நிலவிய அடிமை சேவையின்போது, அடிமைகளை மிகவும் மோசமாக நடத்தியதன் காரணமாக, அடிமைகள் அணிதிரண்டு பேரரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். இதன் காரணமாக, விவசாய நடவடிக்கைகள் வீழ்ச்சி அடைந்ததனால், நாட்டின் பொருளாதாரமும் சமூக நிலையும் மிகவும் மோசமான எதிர்விளைவுகளை எதிர்கொண்டது. இதனால், அரச செலவினமும் அதிகரித்தது.

## ரோமானிய பேரரசன் தெரிவில் ராணுவத் தலையீடு


நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் பிரச்சினைகளில் ராணுவத் தலையீட்டின் காரணத்தினால், கி.பி. 200 - கி.பி. 400 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ரோம் மக்களது வாழ்க்கை மிகவும் நெருக்கடி நிலையினை அடைந்தது.

## நிலப்பிரபுக்களுக்கு அதிக வாய்ப்பு

கி.பி. 5 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 15 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் ரோமானியப் பேரரசு வசம் ஜேர்மனியப் பகுதிகளோ, ஸ்கென்டினேவியப் பகுதிகளோ அடிமைப்பட்டிருக்கவில்லை. ஏனெனில், அப்பகுதியில் பழங்குடி மக்களே வாழ்ந்து வந்தனர். பின்னர், இந்த பழங்குடி மக்கள் ரோமானியப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்த பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி ஆகிய பகுதிகளில் குடியேறத் தொடங்கினர். அவர்கள் தாங்கள் முதலில் குடியேறி இருந்ததைப் போன்று இப் பகுதிகளிலும் குடியேறி வாழத் தொடங்கினர்.

இதனால், இந்த ஜேர்மன் பழங்குடி மக்களுக்கும் ரோமானியப் பேரரசுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன. இதன் ஒரு பிரதிபலிப்பாக தமது சொத்துக்களையும் காணிகளையும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள நிலப்பிரபுக்களிடம் அவர்கள் ஒப்படைத்தனர். இதனால், தேவையான பாதுகாப்பினை அவர்கள் நிலப்பிரபுக்களிடம் இருந்து பெற்றுக் கொண்டனர். இதன் காரணமாகவே, நிலங்களை உரிமை கொண்ட நிலப் பிரபுக்கள் உருவாகினர். காலப்போக்கில் இந்த நாடுகளில் நிலப்பிரபுக்களின் ஆதிக்கமும் செல்வாக்கும் அதிகரிக்கத் தொடங்கியது.

மக்களின் அனைத்து நிலங்களும் நிலப்


மானியமுறை சமூக காலத்தில் வாழ்ந்த நிலப்பிரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரபுக்களின் வசம் சென்றடைந்ததனால், செல்வம் படைத்த செல்வந்தர் வகுப்பொன்று ஐரோப்பாவில் உருவானது. ஐரோப்பிய நிலங்களின் உரிமை நிலப்பிரபுக்கள் சிலரிடம் [illegible]றடைந்ததன் பிரதிபலனாக, 'மானியமுறை (நிலப்பிரபுத்துவ முறை) என்ற புதிய சமூக முறைமை ஒன்று உருவானது. அதற்கேயுரிய அரசியல், பொருளாதார, மத, சமூக, கலாசார விடயங்களும் இதனுடன் வளர்ச்சி அடைந்தன.

## அரசனின் காணிகள் நிலப்பிரபுக்கள் வசம்

நாட்டினுள் இருந்த அனைத்துவிதமான காணிகளின் உரிமையும் அரசன் வசம் இருந்தது. நிலப்பிரபுக்களிடம் இருந்து தேவையான சேவைகளை அரசர்கள் பெற்றுக்கொண்டனர். இதற்காக, அரசன் தம்வசம் இருந்த நிலங்களை, நிலப்பிரபுக்கள் வசம் ஒப்படைத்தார். இதனால், அரசனைவிட, நிலங்களை உரித்துடையவர்களாக நிலப்பிரபுக்கள் மாறினர். இவ்வாறு நிலப்பிரபுக்கள் வசமான நிலங்களை அனுபவிப்பதற்காக, அவர்களுக்கு சேவை செய்ய வேண்டிய நிலைமை சாதாரண பொதுமக்களுக்கு ஏற்பட்டது.

## பாரம்பரிய லட்சணங்கள்

இந்த நிலப்பகுதிகளை சூழ அடர்ந்த காடுகள் காணப்பட்டன. புல்வெளிகள் கொண்ட அந்த அடர்ந்த காடுகள் விலங்குகளுக்கு புற்களை இரையாக்கிக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியது. இந்த பகுதியின் உயர்வான இடம் தேவாலயத்திற்குரியதாக இருந்தது. அதன்கீழ் இருந்த தாழ்வான பகுதிகளில் நிலப்பிரபுக்களின் வாசஸ்தலங்கள் காணப்பட்டன. அதன் கீழ் பகுதியில் நீரோடை ஒன்று இருந்தது.

நீரோடையின் ஒரு புறத்தில் கொத்தடிமைகளின் சிறிய வீடுகள் காணப்பட்டன. அவை களிமண்ணால் அமைக்கப்பட்டு ஓலைகளால் வேயப்பட்ட சிறிய வீடுகளாகும். நீரோடையினைப் பயன்படுத்தி பயிர்செய்யும் விவசாய நிலங்கள் மறுபுறத்தில் இருந்தன. அந்தக் காணிகள் நிலப்பிரபுக்களுக்கு இடையில் பிரிக்கப்பட்டிருந்தன. எஞ்சியவை ஒவ்வொரு வீட்டுக்கும் பிரித்து வழங்கப்பட்டிருந்தன. நிலப்பிரபுவின் காணியில் இலவசமாக பயிர்களை விளைவிக்கும் வேலைகளை இந்த அடிமைகள் மேற்கொள்ளவேண்டியிருந்தது. மேலும், கோதுமை மா ஆலைகள், பாண் தயாரிப்புக்கான வெதுப்பகம் போன்றவற்றை நிலப்பிரபு அமைத்துக் கொடுக்கும் அதேவேளை, அதற்காக அடிமைகள் கொடுப்பனவுகளை பிரபுக்களுக்கு செலுத்த வேண்டியும் இருந்தது.

## நிலப்பிரபுக்களுக்கான மாளிகைகள்

நிலப்பிரபு வசம் மாடமாளிகைகள் இருந்தன. அதன் கூரைப்பகுதிகள் கோட்டையைப் போன்று அலங்கரிக்கப்பட்டு, பாதுகாப்புக்கென மாளிகையை சூழ நீரோடை அமைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து வெளியேற வென திறந்து மூடும் அழகிய மதகு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

## மானியமுறை சமூகத்தின் பொருளாதார அம்சங்கள்

விவசாயமே மானியமுறை சமூகத்தின் அடிப்படையாக இருந்தது. அது தன்னிறைவு கண்ட அடிமைப் பொருளாதார முறையாகவும் இருந்தது. அன்றாடம் தேவையான உணவுகளை அடிமைகள் உற்பத்தி செய்து கொள்வதனால் பணக் கொடுக்கல் வாங்கலினூடாக, பொருட்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் அங்கு இடம்பெறவில்லை. ஏதேனும் தேவைக்காக, வியாபாரம் இடம்பெற்றால் அது பண்டப் பரிமாற்றமாகவே இருந்தது. இந்த சமூக முறையில் மன்னராட்சி முறை இருந்தாலும், அது அதிகாரம் மிக்கதாக காணப்படவில்லை. பிரதேசத்தின் ஆட்சியாளர்களான நிலப்பிரபுக்களே அதிகாரம் பெற்றவர்களாக இருந்தனர். அவர்கள் தத்தம் பகுதிக்குள் நீதி அதிகாரம், வரி அறவிடும் அதிகாரம் என்பனவற்றைக் கொண்டிருந்தனர். மன்னர் நாட்டின் ஆட்சியாளராக இருந்தாலும், நிலப்பிரபுக்கள் உள்நாட்டு விடயங்களை நிர்வாகித்ததன் காரணமாக, நாட்டு அரசியல் நிலவரங்கள் குழப்பத்தை எதிர்கொண்டது.

## மானிய சமூகமுறையில் சமூக அந்தஸ்து

இந்த சமூகமுறையில் ஒருவரின் சமூக அந்தஸ்தினை அவரது பிறப்பின் அடிப்படையிலேயே கணிப்பர். ஒருவர் பிறப்பிலேயே நிலப்பிரபு என்ற அடிப்படை அந்தஸ்தினைக் கொண்டிராதவராக இருந்தால், அந்த அந்தஸ்தை அவரால் அடைய முடியாது. இதன்படி, உயர் மட்ட மக்கள்-கீழ்மட்ட மக்கள், என்ற வேறுபாடும் ஏற்பட்டது. இதனால், குறைந்தளவினரே நிலப்பிரபுக்களாகினர். பெருமளவானோர் கொத்தடிமைகளாயினர். கொத்தடிமைகள் உயிர்வாழ்வதற்காக இரவு-பகலாக உழைக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது.

## மத லட்சணங்கள்


மத்திய காலப்பகுதியில், மதரீதியில் ஒருங்கிணைந்த ஐரோப்பா தொடர்பில் ஒற்றுமைத் தன்மை ஏற்பட்டது. அரசியல் சமூக ரீதியில் பலதரப்பட்ட பிரிவுகளாகப் பிரிந்திருந்தாலும், மத ரீதியில் முழு ஐரோப்பாவிலும் ஒருமித்த ஒற்றுமைத் தன்மையே காணப்பட்டது. ரோமன் கிறிஸ்தவ பேரரசு வீழ்ச்சி அடைந்தாலும் பாப்பாண்டவர் தலைமையிலான கிறிஸ்தவ சமூகம் வீழ்ச்சி அடையவில்லை. பழங்குடி மக்களும் கிறிஸ்தவ மதத்தினை உறுதியாகத் தழுவிக்கொண்டனர். இதன் காரணமாக, முழு ஐரோப்பாவிலும் பாப்பாண்டவரை முதன்மையாகக் கொண்ட கிறிஸ்தவ சமூகம் பரவலடைந்தது.

## மானிய சமூகமுறையின் வீழ்ச்சி

14 ஆம் நூற்றாண்டில் இந்த முறையில் பாரிய மாற்றம் நிகழ்ந்தது. 'கறுப்பு மரணம்' என்றழைக்கப்பட்ட ஆட்கொல்லி தொற்று நோய் ஒன்று ஐரோப்பா முழுவதும் பரவத் தொடங்கியமையே இதற்கான காரணமாகும். ஐரோப்பியர்கள் பெரும்பாலானோர் இதனால் மரணத்தைத் தழுவினர். அதன்பின்னர் உள்ளக மோதல்கள், குழப்பங்கள் பல ஏற்பட்டன. விவசாயிகள் நிலப்பிரபுக்களுடன் மோதல்களை ஏற்படுத்திக்கொண்டனர். இக்காலப்பகுதியில் பிரெஞ்சுப் புரட்சி ஆரம்பமானதுடன், புதிய பல விடயங்களை மக்கள் தேடத் தொடங்கினர். படைப்புகள் மீது மக்கள் ஆர்வம் காட்டத் தொடங்கினர். இலக்கியப் படைப்புகள் மீதும் ஆர்வம் கொண்டனர். இதனால், மானியமுறை எனப்படும் நிலப்பிரபுத்துவமுறை வரலாறு வீழ்ச்சி காணத்தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்



* மேகதூதம்,ரகுவம்சம் ஆகிய வடமொழி நூல்களை எழுதியவர் மகாகவி காளிதாசர் ஆவார். மகாபாரதத்தை வடமொழியில் இயற்றியவர் யார்?
  வேதவியாசர்
* 'அம்பரலங்காய்' குடும்பத்தின் தாவரவியல் பெயரென்ன?
  ஸ்பொன்டியாஸ் டுல்சிஸ்



* மத்திய வங்கியின் கிளைகள் அமைந்திராத நகரம் எது?
  காலி




* 1985 இல் பங்களாதேஷின் தலைநகரில் இருந்து டாக்கா பிரகடனம் வெளியிடப்பட்டது.இதன் மூலம் எந்த அமைப்பு உருவாகியது?
  சார்க் நாடுகள் அமைப்பு
* சகல அதிகாரமும் கொண்ட முடியாட்சி சவுதி அரேபியா, புரூனே போன்ற நாடுகளில் நிலவுகின்றது. வரம்புடைய முடியாட்சி நிலவும் நாடு எது?
  ஐக்கிய ராச்சியம்



* உலகின் குடித்தொகை 2013 இல் 7 பில்லியன் (700 கோடி) ஆகும். உலக குடித்தொகை 1830 இல் எத்தனை கோடியாக இருந்தது?
  ஒரு பில்லியன் (100 கோடி)



* உலகில் மிகப்பெரிய நூலகம் மற்றும் பெரிய புகையிரத நிலையம் எங்கே அமைந்துள்ளது?
  ஐக்கிய அமெரிக்கா-கொங்ரஸ் நூலகம்
  நியூயோர்க் நகரம்-கிரேண்ட் சென்றல் டர்சினல் புகையிரத நிலையம்
* கடற்கரையிலிருந்து மிகவும் தூரத்திலுள்ள தலைநகரங்கள் மூன்றை தருக?
  i. மெக்சிகோ நகரம் - மெக்சிகோ
  ii. உலன்பட்டோ - மொங்கோலியா
  iii. லாசா - திபெத்

## விஜய் மாணவர் கழகம்


அங். இல: 5080
ஆயிஷா சித்தீகா, மருதானை, கொழும்பு-10.


அங். இல: 5081
கி.சிவகரன், நெளுக்குளம், வவுனியா.


அங். இல: 5082
எஃப்.ஸஃபா, ஹுனுபிட்டிய, வத்தளை.


அங். இல: 5083
த.அபிசானுதன், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.


அங். இல: 5084
ஏ.அஸ்ஜக் அஹமட், அம்பாறை 12 ஆம் வீதி, சம்மாந்துறை.


அங். இல: 5085
த.தனுகரன், செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு.


அங். இல: 5086
எம்.யூசுப் சனீர், கல்ஹின்னை, கண்டி.


அங். இல: 5087
எம்.முஆத், அல்-ஹிரா வீதி, கொட்டாரமுல்லை.


அங். இல: 5088
ரா.தமிழினி, புன்னைநீராவி, விசுவமடு.


அங். இல: 5089
ச.சந்திரவதனா, மடுக்கரை, நானாட்டான்.


அங். இல: 5090
த.கல்கிராம், கைகுமு தெற்கு, கைகுமு.


அங். இல: 5091
ஆர்.முஹம்மட் றிஸ்லின், அலியார் மௌலவி வீதி, நிந்தவூர்-12

# மன அழுத்தத்தைக் குறைக்க வாய்விட்டு சிரியுங்கள்!



பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தயங்குபவர்களுக்குத்தான் மன அழுத்தம் ஏற்படுகிறது. பரீட்சையை நன்றாக எழுதிய மாணவர்கள்கூட மன அழுத்தத்துடன் இருப்பது இதனால்தான். எத்தனை இறுக்கமான சூழலாக இருந்தாலும் சிரிக்கக் கற்றுக்கொண்டால், பிரச்சினைகள் பல காணாமல் போய்விடுகின்றன. அந்த வகையில், நல்ல நகைச்சுவை உரையாடல்களை வளர்த்துக்கொள்ளுங்கள். இது இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும். தசைகளை இறுக்கமற்ற நிலைக்கு கொண்டு செல்லும். நுரையீரலுக்கு சுத்தமான காற்றையும் எடுத்துச் செல்லும். எனவே, மன அழுத்தத்தைக் குறைக்க மனம் விட்டு சிரியுங்கள் என்கிறார் மனோதத்துவ நிபுணர் லீ பெர்க்.

இந்த மன அழுத்தமானது, எதையும் எதிர்கொள்ளும் மனநிலை கொண்டவர்களுக்கு குறைவாகவே இருக்கும். எனினும், வேலை-குடும்பம் என இரட்டை அழுத்தமான சூழல்களைக் கொண்டிருப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யலாம். அதை சரியான முறையில் கையாள குடும்பச் சூழல் சரிவர அமைதல் அவசியமாகின்றது.

அலுவலகத்தில் மன இறுக்கத்தைத் தளர்த்த சரியாகத் திட்டமிடுதல், காலத்தை சரியாக அட்டவணையிட்டுப் பயன்படுத்தல், அவ்வப்போது மூச்சை இழுத்து விடுதல், இடையிடையே ஓய்வு எடுத்தல், மனதை



தளர்வாக வைத்திருத்தல், நேர் சிந்தனை உள்ள நண்பர்களுடன் அதிகளவு நேரத்தை செலவிடுதல், ஒரு நேரத்தில் ஒரு வேலையை மட்டும் செய்தல், முக்கியமான பணிகளை முதலில் முடித்தல், அவற்றைப் பகிர்ந்துகொள்ள ஒரு நண்பனைக் கொண்டிருத்தல் என பணிகளை சகஜ மனநிலையுடன் மேற்கொண்டால் மன அழுத்தத்திற்கு ஆளாக வேண்டிய நிலை இருப்பதில்லை. (தொடரும்)

**தொகுப்பு:றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..................................................
முகவரி: ..................................................
..................................................
பாடசாலை: ..................................................
வகுப்பு: ..................................................
திகதி: ..................................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலைப் பாதிக்கும் 'பதற்றநிலை'





'பதற்றநிலை' ஆனது, உள்ளத்தைப் பாதிப்பதால், அது கற்றலிலும் தீய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பதற்றநிலை பொதுவாக அனைத்து மாணவர்களுக்கும் ஏற்படக்கூடியது. மன ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் இந்நிலையை முற்று முழுவதுமாக தடை செய்ய முடியாதெனினும், அந்த நிலை ஏற்படாமல் இயன்றளவு தவிர்ப்பது நல்லது.

கற்கும்போது அமைதியும் ஆறுதலும் மிக மிக அவசியம். கற்றல் செயற்பாட்டின்போது, மன அமைதியும் ஆறுதலும் இருந்தால்தான் கற்பவை மனதில் நிலையாகப் பதியும். கற்பவற்றை நினைவில் பதிக்கும்போதும் சரி; அதனை மீள எடுக்கும்போதும் சரி; அமைதியைப் பின்பற்ற வேண்டும். இல்லையேல், மனக் குழப்பநிலை காரண மாக ஒழுங்கின்றியே விடயங்கள் பதியக் கூடும்.

பதற்ற நிலையானது, உள்ளத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்துவது போல, அது உடலுக்கும் பாதிப்பினை ஏற்படுத்துகிறது. இதனால், மாணவர்கள் நோய்வாய்ப்படவும் நேரும். எனவே, பதற்றநிலையை விடுத்து கற்றலில் ஈடுபடல் வேண்டும். மேலும் பரீட்சையை எதிர்கொள்ளும்போதும் மாணவர்கள் பதற்றநிலைக்கு ஆளாகின்றனர். இதனால், அவர்கள் பரீட்சையிலும் பின்னடைவுகளை எதிர்கொள்ள வேண்டியேற்படுகின்றது.

எனவே, மாணவர்கள் எத்தகைய பிரச்சினைகளுக்கும் அசாதாரண சூழ்நிலைகளுக்கும் முகங்கொடுக்க நேரிட்டாலும் பதற்றம் கொள்ளாமல் மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அறிவுபூர்வமாக சிந்தித்து செயற்பட வேண்டும். இதன்போதுதான் மிகச் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# கிழக்கின் பெருமைகாத்த மாணவர்களுக்குப் பாராட்டு....!







கல்வி அமைச்சு தேசிய ரீதியில் நடாத்திய 'ஆரோக்கியப் புதிர் போட்டி'யில் முதலிடம் பெற்று, கிழக்கு மாகாணத்திற்கும் கல்முனைக் கல்வி வலயத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்த மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு, காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஹாஷீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற, கிழக்கு மாகாண கல்முனை வலய மாணவர்கள் ஐவர் கல்வி அதிகாரிகளால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் இம்மாணவர்கள் நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

பாடசாலை மட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாகாண மட்டங்களில் வெற்றி பெற்று, இறுதியாக களனி சரச்விய சினிமா கலையரங்கில் இடம்பெற்ற இறுதிப் போட்டிகளில் 08 மாகாண மாணவர்களையும் தோற்கடித்து, கிழக்கு மாகாண மாணவர்கள் முதலிடம் பெற்றனர்.

கார்மல் பற்றிமா கல்லூரி, காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் கல்லூரி, கல்முனை மஹ்மூத் பெண்கள் கல்லூரி, நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களே, இவ்வாறு கிழக்கு மாகாணத்திற்குப் பெருமைசேர்த்த மாணவர்களாவர்.

**எம்.ரிஸ்கான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ........................................ நேரம்: 45 நிமிடங்கள்

01) பந்தியை நன்றாக வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு பந்தியிலிருந்து விடை தருக.

அமைதியான இரவுவேளை கடலலைகள் புரண்டு புரண்டு கரையைத் தேடி வருகின்றன. சூரியன் தன் அழகிய இறகுகளை மறைத்துக்கொள்கின்றான். விண்மீன்கள் தமது கண்களை சிமிட்டி அழகுகாட்டுகின்றன. தனிக்காட்டு ராஜாவாக நிலா காட்சி அளிக்கின்றது. இவ் இயற்கை அழகைக் கண்டுகளித்த முதியவர் ஒருவர் ''மீனினம் ஓடித் திரியுதம்மா. அங்கே வெள்ளி ஓடம் ஒன்று தெரியுதம்மா'' என்று முணுமுணுத்தார்.

1. புரண்டு புரண்டு கரையை சேருவன எவை?........................................
2. பந்தியிலுள்ள அடைமொழிச் சொல் எது?........................................
3. பின்வரும் சொற்களுக்கு பொருள் தருக.
   i) விண்மீன்கள் .................... ii) வெள்ளி ஓடம் ....................
4. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்து சொற்கள் இரண்டு தருக.
   i) சூரியன் .......... .......... ii) கடல் .......... ..........
5. இரவுவேளை என்பதன் எதிர்ச்சொல்........................................
6. விண்மீன்கள் கண்களைச் சிமிட்டி அழகு காட்டுகின்றன என்பதன் பொருள் யாது?
   ........................................

02) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

1. நூறாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா ....................
   (பொன்விழா, நூற்றாண்டுவிழா, வைரவிழா)
2. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது....................
   (தீர்ப்பு, தண்டனை, நீதி)

03) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. சுதந்திரமற்று வாழ்பவன் ....................
2. வீண் செலவு செய்பவன் ....................
3. அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் ....................


04) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தருக.

i) Can you help me ....................
ii) Listen to me please ....................

05) பின்வரும் வாக்கியங்களின் கருத்தை ஆங்கிலத்தில் தருக.

i) That's good work ....................
ii) Please go out ....................

06) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.

i  ....................  ii  ....................

07) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துகளில் எழுதுக.

i) எனது புத்தகம் எங்கே? ....................

08) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

i) மே அ(ப்)பே பாசலய ....................

09) தரப்பட்ட சொல்லிற்கு ஒத்தகருத்துச் சொல்லை தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.

i) ஞாலம் - விண், வானம், பூமி, மண்
ii) தொன்மை - புராதனம், நவீனம், புதுமை, நாகரிகம்
iii) புத்தகம் - நூல், படைப்பு, சுவடி, ஏடு

★ ***பின்வரும் பத்து வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையை தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.***

01) ஒரிதழ் பூவிற்கு உதாரணம்;

1. போகன்விலா 2. அந்தூரியம் 3. மல்லிகை 4. தென்னம்பூ

02) இலங்கைக்கே உரிய தாவரம்;

1. நீலவேம்பு 2. சாத்தாவாரி 3. புளி 4. கரு[illegible]




03) பயிர்களை சேதப்படுத்தும் பிராணி பின்வருவனவற்றுள் எது?

1. மண்புழு 2. தேனீ 3. வண்ணாத்துப்பூச்சி 4. நத்தை

04) அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய்;


1.இருமல் 2. தடுமல் 3. வயிற்றுளைவு 4. கூகைக்கட்டு

05) மெழுகுபோல படிவுள்ள தாவர இலை எது?

1. தாமரை இலை 2. நாகதாளி 3. அல்லி 4. மல்லிகை

06) இரவு நேரங்களில் பூக்கும் பூக்களில் வாசனை அதிகம் இருப்பதற்கான காரணம் யாது?

1. சூரிய ஒளி இல்லாமை 2. வண்டுகளைக் கவர
3. காற்று வீசுவதால் 4. சூழலின் குளிர்ச்சி

07)  இவ் உபகரணம் எப் பெயரால் அழைக்கப்படுகிறது?

1. சாந்தகப்பை 2. கைப்பலகை
3. தூக்குக் குண்டு 4. நீர்மட்டம்

08)  இவ் உபகரணம் எதற்காகப் பயன்படுகின்றது?

1. மீன்பிடிக்க 2. பொருட்களை மூட
3. குப்பைகளை அள்ளிச் செல்ல 4. எதற்கும் பயனற்றது

09) பாரங்களை சுமக்கப் பயன்படும் மிருகம் எது?

1. யானை 2. கழுதை 3. ஒட்டகம் 4.மேற்கூறிய யாவும்

10)  இப்போக்குவரத்து குறியீடு குறித்து நிற்பது எதனை?

1. முற்சந்தி முன்னால் 2. முன்னால் திரும்பு
3. சந்தி முன்னால் 4. முன்னால் செல்லத் தடை

11) இலங்கைப் படத்தில் பெருந்தெருக்களை குறிக்கப் பயன்படும் நிறம் யாது?

1. கறுப்பு 2. சிவப்பு 3. மஞ்சள் 4. பச்சை

★ ***வெற்றிடத்தில் விடைகள் தருக.***

01. இலக்கங்களில் எழுதுக.

முப்பதாயிரத்து இருநூற்றைம்பது ....................

02. அடுத்து வரும் இரு எண்கள் எவை?

753, 652, 551 .........., ..........

03.  (i) தரப்பட்டுள்ள உருவில் 2/8 ஐ நிழற்றிக் காட்டுக.
(ii) நிழற்றப்படாத எஞ்சிய பந்தியை பின்னத்தில் தருக. ....................

04. வெற்றிடங்களை நிரப்புக .

   3kg 300g
 + 2kg 750g
 ___________

 ___________

05. ஒரு பாத்திரத்தில் 5l 330ml நீர்கொள்ளும். தம்பி முதலில் 2l 200ml நீரையும் தங்கை 1l 250 ml நீரையும் ஊற்றி நிரப்பினால் அப்பாத்திரத்தில் மேலும் ஊற்றக்கூடிய நீரின் அளவு யாது? ....................

06. 20m சுற்றளவு கொண்ட சமபக்க சதுரக் காணி ஒன்றின் 1m இடைவெளியில் தூண்கள் நடப்படுமாயின், அக்காணியில் நடப்பட்டிருந்த தூண்களின் எண்ணிக்கை யாது?....................


07. உமது நிறை 22kg. உமது அம்மாவின் நிறை உமது நிறையின் மூன்று மடங்கு ஆகும் எனின், இருவரினதும் நிறை யாது?....................

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# BBM Music Service இடைநிறுத்தப்படவுள்ளது




BlackBerry நிறுவனம் 2011 இல் ஆரம்பித்த, தனது கட்டண இசை வழங்கிச் சேவையான 'BBM Music Service' ஐ எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதியுடன் இடைநிறுத்தப்போவதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. இது குறித்த அறிவிப்பை BBM Music Service ஐப் பயன்படுத்தும் தனது மொபைல் வாடிக்கையாளர்களுக்கு BlackBerry நிறுவனம் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

மாதமொன்றுக்கு 4.99 டொலர்கள் கட்டணத்தில், மில்லியன் கணக்கான பாடல்களிலிருந்து 50 பாடல்களைப் பதிவிறக்கி -கேட்டு மகிழக்கூடியதாகவே இந்த 'BBM Music' சேவை இருந்தது. இந்தப் பாடல்களுக்கு மேலதிகமாக, இந்தச் சேவையில் உங்கள் நண்பர்களும் இணைந்திருந்தால், அவர்களது 50 பாடல்களை நீங்களும் உங்களது 50 பாடல்களை அவர்களும் கேட்டு ரசிக்க முடியும். இவ்வாறு உங்கள் நண்பர்கள் வட்டம் பெருகும்போது, நீங்கள் அதே கட்டணத்தில் அதிக எண்ணிக்கையில் பாடல்களைக் கேட்டு ரசிக்கலாம். ஆக, இந்த நிலையிலேயே இந்தச் சேவை, இடைநிறுத்தப்படவுள்ளது என்ற அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

ஜூன் 2 ஆம் திகதியுடன் இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்ட பின்னர், இதற்கென BlackBerry Mobile இல் பதியப்பட்டுள்ள app ஐ நீக்கிவிடுமாறும் BlackBerry நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது. இதேவேளை, BlackBerry யின் புதிய வெளியீடான BB 10 Mobile இல், BBM Music இற்குரிய app இணைக்கப்படாததால், BB 10 பாவனையாளர்களுக்கு இது தொடர்பான சிரமங்களேதும் இருக்கப் போவதில்லை என அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.



எஸ்.பிரதீப்

# 'அன்ட்ரொய்ட்' பற்றி அறிவோம்




தகவல் தொழில்நுட்பத் துறையில் கணினிக்கு அடுத்தபடியாக, மிகப்பெரிய சந்தைப் பொருள் 'மொபைல்ஃபோன்'கள் ஆகும். கணினிகளில் நாம் பயன்படுத்தும் அனேக வசதிகளும் தற்போது மொபைல்ஃபோன்களிலும் வந்துவிட்டன.

மொபைல்ஃபோன் சந்தைகளின் எதிர்காலத்தை ஓரளவு கணித்த கூகிள் நிறுவனம், 'அன்ட்ரொய்ட்' (Android) என்னும் இயங்குதளம் மூலம் மொபைல்ஃபோன் சந்தையில் களமிறங்கியது. 'அன்ட்ரொய்ட்' என்பது Smartphone மற்றும் Tablet PC களுக்கான ஓர் இயங்குதளமாகும். இது லினக்ஸ் கொர்நெல் (Linux Kernel) என்னும் இயங்குதளத்தை அடிப்படையாகக் கொண்டது. இதில் சில மாற்றங்களைச் செய்து தனது தயாரிப்பாக கூகிள் வெளியிட்டது.

அன்ட்ரொய்ட் இயங்குதளமானது, தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றது.





ஒவ்வொரு தடவை மேம்படுத்தப்படும்போதும் பழைய பதிப்பில் உள்ள பிழைகள் களையப்பட்டு புதிய வசதிகள் அறிமுகப் படுத்தப்படுகின்றன. அத்துடன், ஒவ்வொரு பதிப்பிற்கும் இனிப்புப் பண்டங்களின் பெயர்களையும் சூட்டியுள்ளது. இதன்படி, சமீபத்திய பதிப்புகள் Ice Cream Sandwich (Android 4.0), Jelly Bean (Android 4.1) என்பவாகும். அன்ட்ரொய்ட் புதிய பதிப்பு வந்தவுடனேயே, நீங்கள் அதனைப் பெற முடியாது. மாறாக, நீங்கள் வைத்திருக்கும் மொபைலுக்குரிய வசதியை குறித்த மொபைல் நிறுவனம் கொடுக்கும் போதுதான் நீங்கள் பெற முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் இணைய அகராதி Little Explorer



நமக்குப் புரியாத வார்த்தைகளுக்கு அர்த்தம் தேவை என்றால், எமக்கு அதுபற்றிய விளக்கத்தைத் தருவதுதான் 'அகராதி'. எனினும், நவீன உலகில் அகராதிகள் இணையத்திலும் உலா வரத் தொடங்கியுள்ளன. அந்தவகையில், சிறுவர்களுக்கென்றும் ஓர் இணைய அகராதி உருவாக்கப்பட்டுள்ளது.





little explorer என்னும் அந்த இணைய அகராதி, சிறுவர்கள் தமக்குத் தெரியாத வார்த்தைகளுக்கு அர்த்தத்தை தெரிந்துகொள்ள ஏற்ற வகையில், அழகான புகைப்படங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.இந்த அகராதி சிறுவர்களுக்கு என்றே உருவாக்கப்பட்டுள்ளதால், இதில் வார்த்தைகளுக்கான அர்த்தத்தைப் புகைப்படத்தின் துணையோடு பார்த்துப் புரிந்துகொள்ளலாம்.

enchantedlearning.com என்னும் கல்வித் தளத்தின் ஓர் அங்கமான இந்த இணைய அகராதியில், ஆங்கில எழுத்துக்கள் அகர வரிசைப்படி இடம்பெற்றுள்ளன. உங்களுக்கு எந்தச் சொல் தேவையோ, அந்தச் சொல்லுக்கான எழுத்தை click செய்தால், அந்த எழுத்தில் ஆரம்பிக்கும் வார்த்தைகளின் பட்டியல் தோன்றுகின்றது.

எல்லா வார்த்தைகளும் மிக அழகாக அவற்றுக்கான புகைப்பட விளக்கத்தோடு இருப்பதால், அந்தச் சொல் உணர்த்தும் பொருளைக் காட்சி ரீதியாகவும் புரிந்துகொள்ளலாம். அவற்றுக்கான எளிய விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, பெரும்பாலான வார்த்தைகளுக்கு தனிப் பக்கமும் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த பக்கத்தில் click செய்தால், கூடுதல் தகவல்களை தெரிந்துகொள்ள முடிவதுடன், தொடர்புடைய வார்த்தைகளின் இணைப்புகளையும் பார்க்கலாம்.


இது பிரதானமாக ஆங்கில மொழிச் சொற்களுக்கான அகராதி என்றாலும் ஆங்கிலம் தவிர, டச், ஃப்ரெஞ்ச், இத்தாலி, ஜேர்மன், ஜப்பான், போர்த்துக்கீஸ் ஆகிய மொழிகளுக்கான அர்த்தங்களைப் பார்க்கும் வசதியும் இங்கு இருக்கிறது. மேலும் பல பயனுள்ள அம்சங்கள் இந்த தளத்தில் இருக்கின்றன. வழக்கமான இணைய அகராதியைப் பயன்படுத்துவதைவிட, சிறுவர்களுக்காக என்றே வடிவமைக்கப்பட்டுள்ள இந்த அகராதி சிறுவர்களுக்கு நிச்சயம் ஏற்றதாக இருக்கும். இதற்கான இணையத்தள முகவரி http://www.enchantedlearning.com/Dictionary.html என்பதாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



(கடந்த வாரத் தொடர்ச்சி)

## PANDA USB VACCINATION TOOL




பென்டா நிறுவனம் வழங்கும் இலவச மென்பொருள் இது. இந்த மென்பொருளை நம் கணினியில் நிறுவினால், பென் ட்ரைவில் உள்ள சிக்கல் நிறைந்த autorun.inf என்னும் கோப்பை முற்றிலுமாக கட்டுப்படுத்திவிடும்.

# பென் ட்ரைவை பாதுகாக்க சில மென்பொருட்கள்







உங்கள் பென் ட்ரைவில் தானியங்கும் வசதி தடுக்கப்படுவதால், வைரஸ் பரவும் வாய்ப்பு முற்றிலுமாக இல்லாமற்போகிறது. இந்த மென்பொருளுக்கு நமக்குத் தேவையான Short Cut தேர்வு செய்யும் வசதியும் உள்ளது.

http://download.cnet.com/Panda-USB-Vaccine/3000-2239_4-10909938.html எனும் இந்த இணைப்பினூடாக P/ USB VACCINATION TOOL மென்பொருளை தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

## USB GUARDIAN

இந்த மென்பொருள் பயன்படுத்துவதற்கு மிகவும் இலகுவானது. இதன்மூலம் நமக்குத் தேவையான முக்கிய கோப்புகளையும் பயமின்றிப் பாதுகாப்பாகச் சேமித்துக் கொள்ள முடியும். வைரஸ் பாதிக்கும் என்ற கவலை தேவையில்லை. இந்த மென்பொருள்மூலம் நமக்குத் தேவையான கோப்புகளை நாம் lock செய்தும் வைத்துக்கொள்ளலாம் என்பது இதன் சிறப்பம்சமாகும்.

http://www.usb-guardian.com/ எனும் இந்த இணைப்பினூடாக USB GUARDIAN மென்பொருளை தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.




12

இங்கே வெட்டவும்


# USB 2.0 VS USB 3.0

கணினி மற்றும் பிற டிஜிட்டல் சாதனங்களுக்கிடையே, தகவல் பரிமாற்றத்திற்கு பெருந்துணையாக இருப்பது USB இணைப்புக்களே! Universal Serial Bus என அழைக்கப்படும் இந்தத் தொழில்நுட்பம், 1996 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் இல் USB 2.0 அறிமுகப் படுத்தப் பட்டு உலகெங்கும் பயன்படுத்தப் படுகிறது. இப்போது USB 3.0 அறிமுகப்படுத்தப்பட்டு அதிக வேகத்திலும் எளிமையான வழியிலும் தகவல் பரிமாற்றத்திற்கு மேலும் வலுச் சேர்த்துள்ளது.


USB 3.0 USB 2.0

USB 3.0 ஆனது, அதன் முன்னோடியான USB 2.0 வை விட பத்து மடங்கு வேகமாக இயங்குகிறது. Portable மற்றும் வன்தட்டுகளின் செயல்பாட்டில் இவை படுவேகமாக இயங்குவதை நாம் உணரலாம். USB 2.0 ஆனது, ஒரு செக்கனில் 480 Mb தகவல்களையே கடத்துகின்றது. ஆனால், USB 3.0 ஆனது, ஒரு செக்கனில் 5 Gb தகவல்களை மாற்றுகிறது. இதனால், USB 2.0 மூலம் 15 நிமிடங்களில் மேற்கொள்ளப்பட்ட தகவல் பரிமாற்றத்தினை USB 3.0 மூலம் ஒரு நிமிடத்தில் மேற்கொள்ளலாம்.

இந்த இரு வகைச் சாதனங்களிலும் பயன்படுத்தப்படும் கேபிள் வயரிங் அமைப்பு வேறுபட்டிருந்தாலும், USB சாதனத்தை மற்ற சாதனங்களுடன் இணைக்கும் வழி இரண்டிலும் ஒரே மாதிரியாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொழில்நுட்பங்களுக்கும் இடையே உள்ள மிக முக்கிய வேறுபாடு, தகவல் செல்லும் பாதைதான். USB 3.0 வினால் தகவலை அனுப்பும் அதே நேரத்தில், தகவலைப் பெறவும் முடியும். ஆனால், USB 2.0 வினால் ஏதேனும் ஒரு திசையில்தான் ஒரு நேரத்தில் தகவலை அனுப்ப முடியும். இதனை ஆங்கிலத்தில் 'Polling mechanism USB2' என்றும் 'Asynchronous mechanism USB3' என்றும் கூறுவார்கள்.






அத்துடன், இந்த முன்னேறிய தொழில்நுட்பம் வன்தட்டுகளுக்கிடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்கையில் மிக உதவியாக இருக்கும். மேலும், USB 3.0 தொழில்நுட்பம் ஒரே நேரத்தில் கூடுதலான எண்ணிக்கையில் USB சாதனங்களை இயக்கும் திறன் கொண்டது. இதனால், அதிக எண்ணிக்கையில் USB போர்ட் கொண்ட USB Hub களைப் பயன்படுத்தலாம் என்பதும் இதன் சிறப்பாகும்.



# உங்கள் தனிப்பட்ட தகவல்களை விற்கிறது Facebook

Facebook என்பது, நம்மில் அநேகமானவர்கள் பயன்படுத்தும் ஒரு சமூக ஒருங்குதளம் ஆகும். இந்தத் தளமானது, அதில் பதிவுசெய்வது முதற்கொண்டு எமக்குப் பல சேவைகளை இலவசமாக வழங்குகிறது. இவ்வளவு விடயங்களை எமக்கு இலவசமாகத் தருகிறதே... இதற்கெல்லாம் Facebook இற்கு வருமானம் எங்கிருந்து வருகிறது? என்ற கேள்வி பலருக்கும் எழக்கூடும். விளம்பரங்களை பிரசுரித்துக் கட்டணங்களை அறவிட்டாலும் அந்த விளம்பரங்கள்மூலம் அதிகளவு வருமானம் அவர்களுக்கு கிடைக்குமா? என்பது கேள்விக்குறியே! ஆனால், உங்கள் தனிப்பட்ட தகவல்களை விற்பதனாலும் Facebook வருமானம் ஈட்டுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?




**உங்கள் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு விற்கப்படுகின்றன?**

Facebook இல் உள்ள உங்கள் தனிப்பட்ட தகவல்கள், உதாரணமாக: நீங்கள் வசிக்கும் பிரதேசம், நீங்கள் படித்த பாடசாலை, வேலைசெய்யும் இடம், பயன்படுத்தும் சோப், மொபைல்ஃபோன், உங்கள் நண்பர்கள்... இப்படி அத்தனை விபரங்களையும் Facebook தன்னுடைய Database இனுள் வைத்திருக்கிறதல்லவா? அந்தத் தகவல்களை தேவைப்படும் நிறுவனங்களுக்கு Facebook கொடுக்கிறது. இது மட்டுமல்லாமல், சில Research நிறுவனங்களுக்கும் நமது தனிப்பட்ட தகவல்களை Facebook கொழுத்த தொகைக்கு விற்று வருவதாக தகவல்கள் வெளியாகின்றன.

இது உண்மையா? என்பதை அறிந்துகொள்ள நீங்கள் Facebook இல் பதிவிடும் அல்லது Like செய்யும் விபரங்களோடு, உங்கள் Facebook பக்கங்களில் பிரசுரமாகும் விளம்பரங்களை ஒப்பிட்டுப்பாருங்கள். இந்த உண்மை உங்களுக்குப் புரியும். இதேவேளை, உங்களிடமிருந்து சராசரியாக Facebook எவ்வளவு பணம் சம்பாதிக்கிறது? என்பதை அறியலாம் என்கிறது ஓர் இணையத்தளம். அதற்காக https://goprivate.abine.com/ என்ற இணைப்பிற்குச் செல்லுங்கள். அங்கே கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளியுங்கள். Submit பொத்தானை அழுத்துங்கள். Facebook இல் உங்கள் பெறுமதி என்ன என்று அங்கே காட்டப்படும் பட்டியல் தெரிவிக்கும் (இது எந்த அளவுக்கு துல்லியமானது என்பது தெரியாது). அத்துடன், இது Facebook இன் சர்வதேச சந்தை நிலவரத்தைப் பொறுத்து மாறுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Adobe Photoshop மென்பொருளின் பயன்பாடு

# கண்களின் நிறத்தை விரும்பிய நிறத்துக்கு மாற்றுவது எப்படி?



(கடந்த வாரத் தொடர்ச்சி)

இனி, Select மெனுவினுள் நுழைந்து Load Selection என்பதைக் க்ளிக் செய்யுங்கள்.

**(படம் - 007)**

இப்போது Load Selection என்னும் தெரிவுக்கான தனியான கட்டுப்பாட்டுத் திரை தோன்றியிருக்கும். அதில் இங்கே படத்தில் காட்டப்பட்டுள்ளதுபோல, நீங்கள் முதலில் கண்களைத் தெரிவுசெய்து வைத்தபோது, கொடுத்த பெயரை தெரிவுசெய்யுங்கள். கீழே உள்ள பொத்தான்களில் Add to Selection என்பதை தெரிவுசெய்துவிடுங்கள்.

**(படம் - 008)**

அவ்வாறு நீங்கள் தெரிவுசெய்ததும், புகைப்படத்திலுள்ள இரண்டு கண்களும் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டு வர்ணம் மாற்றுவதற்குத் தயாராகிவிடும்.

**(படம் - 009)**

அடுத்ததாக, Layer மெனுவினுள் சென்று New Adjustment Layer இனுள் Hue/Saturation என்பதைத் தெரிவுசெய்யுங்கள்.

**(படம் - 009-001)**

உடனே, Hue/Saturation இற்கான தனியான Window தோன்றும். அதில், வலதுபுற கீழ் மூலையிலுள்ள Colorize என்பதைத் தெரிவுசெய்துவிடுங்கள். இங்கே படத்தில் கொடுக்கப்பட்டுள்ளதுபோன்று Hue இன் பெறுமதி 216 ஆகவும் Saturation இன் பெறுமதி 50 ஆகவும் இருக்குமாறு மாற்றிக் கொள்ளுங்கள். வெவ்வேறு பெறுமதிகளைக் கொடுத்து நிற மாற்றங்களின் வித்தியாசங்களையும் உணர்ந்துகொள்ளுங்கள்.

**(படம் - 009-002)**


அடுத்து, 'Ok' பொத்தானை அழுத்துங்கள். உங்கள் புகைப்படத்தில் நீங்கள் தெரிவுசெய்து வைத்திருந்த கண்களின் பகுதிகள் அற்புதமான நீல நிறமொன்றுக்கு மாறியிருப்பதைக் காண்பீர்கள்.

**(படம் - 009-003)**

இதுபோல, வெவ்வேறு புகைப்படங்களுக்கு கண்களை நிறம் மாற்றி உங்களைப் பயிற்சிப்படுத்திக்



(படம் - 007)



(படம் - 008)



(படம் - 009) (படம் - 009-001)




(படம் - 009-002)



(படம் - 009-003)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தளிர்கரம்




நிறந்தீட்டப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டுள்ள படங்களைப் பார்த்து, கீழே பூரணப்படுத்தப்படாத உருக்களை அமைத்து நிறந்தீட்டுங்கள்.



தரப்பட்டுள்ள பெட்டிகளில் உருக்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு எழுதுக.





புள்ளிகளை இணைத்தால் வரும் உரு எது என்பதைக் கண்டறியுங்களேன்.

# செய்தி என்பது...

## ஊடகம் (Channel), ஊடுகடத்தி (Transmitter) செல்வழி

## ஊடக பாடநெறி 29


தொடர்பாடுபவர் பெறுநரை நோக்கி செய்தியை அனுப்புவதற்கு தெரிவுசெய்துள்ள கருவியே செய்தி முன்வைக்கின்ற ஊடகம் எனப்படுகின்றது. புராதன தொடர்பாடல் செயன்முறைகளிலும், நவீன தொடர்பாடல் பிரவேசங்களிலும் பல்வேறுபட்ட தொடர்பாடல் ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

செய்தி முன்வைக்கப்படும் ஊடகங்களில் மரபுவழி சார்ந்தவை, அச்சு ஊடகங்கள், மின்னியல் ஊடகங்கள், நவீன ஊடகங்கள் என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன.




செய்தி முன்வைக்கப்படும் ஊடகம் பற்றி மார்ஸல் மெக்லூகன் குறிப்பிடுகையில், ''எழுத்து மூலமான இதழ்வழிச் செய்தியானது, பார்வையை மட்டும் ஈர்த்து செய்தியைப் புரிய வைக்கும். ஆனால், ஏனைய ஒலி-ஒளி சாதனங்கள் கண், செவிப்புலன்களை ஈர்த்து செய்தியைப் புரிய வைக்கின்றன. இதனால், செய்தி செல்லும் வழி எதுவாக இருந்தாலும் அவ்வூடகத்தை தெரிவுசெய்பவருக்குப் பொருந்தும் வகையில் அமைய வேண்டும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

தொடர்பு ஊடகம் நேர்த்தியாக அமைகின்றபொழுதே, தகவல் தொடர்பு வலுவுள்ளதாக அமையும். ஊடகங்கள் குறியீடு, சமிக்ஞை, சித்திரம், வாய்மொழி, எழுத்து மொழி மூலம், ஒலிப்பதிவுகள், ஒளிபரப்புக்கள், வெகுசன ஊடகங்கள், சமூக ஊடகங்கள் என






விரிவுபட்டமைகின்றன. ஊடகத்தை மாற்றுகின்றபொழுது அதனால், ஏற்படுகின்ற தாக்கமும் வேறுபட்டமைகின்றன. வாய்மொழி நேரடித் தொடர்பில் மொழி ஊடகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

பொதுமக்கள் தொடர்பு சாதனங்கள், பிரதிநிதித்துவ தொடர்பு சாதனங்கள் (புத்தகம், புகைப்படம், கடிதம்), இயந்திர நுட்பம் சார்ந்த சாதனங்கள் (தொலைக்காட்சி,வானொலி, தொலைநகல், மின்னஞ்சல்) என வகைப்படுத்தி நோக்கப்படுகின்றன. பெறுநர்களின் திறமைக்கு ஏற்ப ஊடகங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். தகவல் பரிமாற்ற ஊடகங்களின் பயன்பாட்டின் போது, ஊடகங்களின் பலவீனமான வெளிப்படுத்தலாக ஊடகங்கள் ஏற்படுத்தும் தடைகள் அமைகின்றன. (தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் பஸ் நிலையத்தில் வசந்திக்கும் சுனிலுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**වසන්ති:** **ආයුබෝවන් මහත්මයා.**
ஆயுபோவன் மஹத்மயா.
வசந்தி: **வணக்கம் ஐயா.**

**සුනිල්:** **ආයුබෝවන්.**
ஆயுபோவன்.
சுனில்: **வணக்கம்.**

**වසන්ති:** **පුත්තලම බස් එක කීයටද?**
புத்தளம பஸ் எக கீயட்டத?
வசந்தி: **புத்தளம் பஸ் எத்தனை மணிக்கு?**

**සුනිල්:** **පුත්තලම බස් එක උදේ නමයට.**
புத்தளம பஸ் எக உதே நமயட்ட.
சுனில்: **புத்தளம் பஸ் காலை ஒன்பது மணிக்கு.**

**වසන්ති:** **බස් එක මේ වේදිකාවටද එන්නේ?**
பஸ் எக மே வேதிகாவட்டத என்னே?
வசந்தி: **பஸ் இந்த மேடைக்கா வரும்?**

**සුනිල්:** **ඔව්, මේ වේදිකාවට තමයි එන්නේ. ඔයා කොහේද යන්නේ?**
ஒவ், மே வேதிகாவட்ட தமய் என்னே. ஒயா கொஹேத யன்னே?
சுனில்: **ஆம், இந்த மேடைக்குத்தான் வரும். நீங்கள் எங்கே போகிறீர்கள்?**

**වසන්ති:** **මම යාලුවෙක් බලන්න මුන්දලමට යනවා. ඔයා කොහේද යන්නේ?**
மம யாலுவெக் பலன்ன முந்தலமட்ட யனவா.
ஒயா கொஹேத யன்னே?
வசந்தி: **நான் நண்பரொருவரைப் பார்க்க முந்தலுக்குப் போகிறேன். நீங்கள் எங்கே போகிறீர்கள்?**

**සුනිල්:** **මම පුත්තලමට යනවා. එහේ මගේ පොල්වත්තක් තියෙනවා.**
மம புத்தளமட்ட யனவா. எஹே மகே பொல்வத்தக் தியெனவா.
சுனில்: **நான் புத்தளம் போகிறேன். அங்கே என்னுடைய தென்னந்தோட்டம் ஒன்று இருக்கிறது.**

**වසන්ති:** **එහෙ කවුරුත් ඉන්නවාද?**
எஹெ கவுருத் இன்னவாத?
வசந்தி: **அங்கே யாரேனும் இருக்கிறார்களா?**

**සුනිල්:** **ඔව්, වත්තේ පවුලක් ඉන්නවා. ඔවුන් වත්ත බලා ගන්නවා.**
ஒவ், வத்தே பவுலக் இன்னவா. ஒவுன் வத்த பலா கன்னவா.
சுனில்: **ஆம், தோட்டத்தில் ஒரு குடும்பம் இருக்கிறது. அவர்கள் தோட்டத்தைப் பார்த்துக்கொள்கிறார்கள்.**

**වසන්ති:** **ඔයා කොහෙද වැඩ කරන්නේ?**
ஒயா கொஹெத வெட கறன்னே?
வசந்தி: **நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்?**

**සුනිල්:** **මම වෙළඳාම් කරනවා. මට කඩයක් තියෙනවා.**
மம வெலந்தாம் கறனவா. மட்ட கடயக் தியெனவா.
சுனில்: **நான் வியாபாரம் செய்கிறேன். எனக்கு கடையொன்று இருக்கிறது.**

**වසන්ති:** **කඩේ කොහේද තියෙන්නේ?**
கடே கொஹேத தியென்னே?
வசந்தி: **கடை எங்கே இருக்கிறது?**

**සුනිල්:** **කොටහේනේ. අන්න බස් එක එනවා.**
கொட்டஹேனே. அன்ன பஸ் எக எனவா.
சுனில்: **கொட்டாஞ்சேனையில். அதோ, பஸ் வருகிறது.**

**වසන්ති:** **හොඳයි, ස්තුතියි.**
ஹொந்தய், ஸ்துதிய்.
வசந்தி: **நல்லது, நன்றி.**






நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களில் (Present Perfect Tense) காணப்படுகின்ற வினா வாக்கியம், உடன்பாடு வாக்கியம் மற்றும் எதிர்மறை வாக்கியம் ஆகியவற்றை ஒரே பார்வையில் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) அவர்கள் அந்த வேலையை செய்துவிட்டார்களா?
Have they done that work?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஆ) ஆம், அவர்கள் அந்த வேலையை செய்துவிட்டார்கள்.
Yes, they have done that work.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(இ) இல்லை, அவர்கள் அந்த வேலையை இன்னும் செய்துவிடவில்லை.
No, they have not yet done that work.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

(ஈ) அவர்கள் அந்த வேலையை முடித்துவிட்டார்களா?
Have they finished that work?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(உ) ஆம், அவர்கள் அந்த வேலையை முடித்துவிட்டார்கள்.
Yes, they have finished that work.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) இல்லை, அவர்கள் அந்த வேலையை இன்னும் முடித்துவிடவில்லை.
No, they have not finished that work yet.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

(எ) நீ இந்தச் சிறுமியை முன்னர் பார்த்துள்ளாயா?
Have you seen this girl before?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஏ) ஆம், நான் இந்தச் சிறுமியை முன்னர் பார்த்துள்ளேன்.
Yes, I have seen this girl before.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஐ) இல்லை, நான் இந்தச் சிறுமியை ஒருபொழுதும் பார்த்திருக்கவில்லை.
No, I have never seen this girl.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

(அ) நீ உனது வேலையை ஆரம்பித்துவிட்டாயா?
Have you started your work?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஆ) ஆம், நான் எனது வேலையை ஆரம்பித்துவிட்டேன்.
Yes, I have started my work.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(இ) இல்லை, நான் எனது வேலையை இன்னும் ஆரம்பித்துவிடவில்லை.
No, I have not yet started my work.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

(ஈ) திலக் வெளிநாடு செல்லத் தீர்மானித்துவிட்டானா?
Has Thilak decided to go abroad?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(உ) ஆம், அவன் வெளிநாடு செல்லத் தீர்மானித்துவிட்டான்.
Yes, he has decided to go abroad.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஊ) இல்லை, அவன் வெளிநாடு செல்ல இன்னும் தீர்மானித்துவிடவில்லை.
No, he has not yet decided to go abroad.
(எதிர்மறை வாக்கியம் -Negative Sentence)

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்ததும் தெரியாததும்


1. புகையிரதம் இல்லாத நாடு எது?
   ஆப்கானிஸ்தான்
2. இலங்கை அணி உலகக் கோப்பையை எத்தனையாம் ஆண்டு வென்றது?
   *1996*
3. 'ஒஸ்கார்' விருது வழங்கும் நாடு எது?
   அமெரிக்கா
4. பாலைவனம் இல்லாத கண்டம் எது?
   ஐரோப்பாக் கண்டம்
5. உலகின் மிகப்பெரிய கண்டம் எது?
   ஆசியாக் கண்டம்

ஆர்.எம்.ரஸ்மி,
வெளிமடை மு.ம.வித்.,
வெளிமடை.


## வியர்வை



மனித உடலில் உருவாக்கப்படும் கழிவுப் பதார்த்தங்கள் தோலினூடாக வியர்வையாகி வெளியேறுகின்றன. எம்மில் 300,000 வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. இவை நாளாந்தம் 0.5 லீற்றர் நீரை வியர்வையாக வெளியேற்றுகின்றன.



உடலிலிருந்து வெளியேறும் போது அதற்கு மணம் காணப் படுவதில்லை. எனினும், சிறிது நேரத்தில் வியர்வையின்மீது வியர்வையில் 99% நீராகும். சோடியம் க்ளோரைட் போன்ற உப்புகளும் யூரியா, யூரிக் அமிலம் போன்ற உடலுக்குப் பயனற்ற பதார்த்தங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. வியர்வை பக்ற்றீரியாக்கள் தொழிற்படுதலே துர்மணம் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது.



மேற்புறத் தோலைப் பற்றியுள்ள வியர்வைச் சுரப்பி

றிஸ்மினா முஸம்மில்,
அல்-அஸ்ஹர் மு.ம.வித்.,
ஹெம்மாதகமை.



## வேண்டும்!!!

சுதந்திரமான உலகம் வேண்டும்!
நல்ல நண்பர்கள் வேண்டும்!
நல்ல பெற்றோர் வேண்டும்!
நல்ல ஆசான் வேண்டும்!

நல்ல உறவினர் வேண்டும்!
நல்ல சகோதரர்கள் வேண்டும்!
நல்ல ஆட்சியாளர் வேண்டும்!
நல்ல மக்கள் வேண்டும்!

இறைவனின் நல்லாசி
பெற்றவர்கள் வேண்டும்!
இத்தனையும் நிறைவேற
இறைவரம் வேண்டும்!

வி.உ.ரோமிளா.

## நோய்களைக் குணப்படுத்தக்கூடிய பழங்கள்



* நெல்லி, எலுமிச்சை, தோடை - பல்வியாதிகள்
* எலுமிச்சை, அப்பிள், பப்பாளி, அன்னாசி - தொண்டைப் புண்
* நெல்லி, எலுமிச்சை - மூலநோய், இருமல்
* கொய்யா, மாதுளை, வாழைப்பழம், தேன், அப்பிள் - இருதயநோய்
* எலுமிச்சை பழரசம், அப்பிள்- தலைவலி
* எலுமிச்சை, நாவற்பழம், வாழைப்பழம், விளாம்பழம் - வயிற்றோட்டம்
* மங்குஸ்தான், வாழைப்பழம், உலர்ந்த திராட்சை - காய்ச்சல்

யூ.எல்.இஸ்ரத்பானு,
சுலைமானியா மு.வித்., குரீகொடுவ.

## எல்லாம் நன்மைக்கே




மகத நாட்டை மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அந்நாட்டு அரச சபையில் இருந்த மந்திரி ஒருவர் எப்போது எது நடந்தாலும், ''எல்லாம் நன்மைக்கே'' என்பார். ஒருநாள் வாள்ப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அரசனின் காலில் ஒரு காயம் ஏற்பட்டுவிட்டது. அதைக்கண்ட மந்திரி ''எல்லாம் நன்மைக்கே'' என்றார்.இதனால், கோபம் கொண்ட அரசன் மந்திரியை ஒழித்துக் கட்டுவதென முடிவு செய்தான். ஒருநாள் அரசனும் மந்திரியும் வேட்டைக்காக காட்டிற்குச் சென்றிருந்தனர். அப்போது ஒரு குழியில் மந்திரியைத் தள்ளிவிட்டு, அரசன் பயணத்தைத் தொடர்ந்தான். ஆனால், வழியில் மனிதர்களை உண்ணும் காட்டுவாசிகளிடம் அவன் பிடிபட்டுவிட்டான். ஆனால், அரசனின் காலில் காயம் இருப்பதைக் கண்ட அவர்கள் இவன் நரபலிக்குத் தகுதி இல்லாதவன் எனக் கருதி அவனை விட்டுவிட்டனர். ''மந்திரி அன்று கூறிய விடயத்தில் உண்மை இருக்கிறது'' என்பதை உணர்ந்த அரசன் மனம் வருந்தி மந்திரியை மீட்பதற்காகச் சென்றான். அங்கு சென்ற அரசன் நடந்தவற்றைக் கூறி மந்திரியிடம் மன்னிப்புக் கேட்டார். அப்போதும் மந்திரி ''எல்லாம் நன்மைக்கே'' என்றார். அதற்கு அரசன் ''ஏன் அவ்வாறு மீண்டும் கூறுகிறீர்'' என்றார். ''அரசே என்னை நீங்கள் இக்குழியில் தள்ளிவிடாமல் கூட்டிச் சென்றிருந்தால் அக்காட்டுவாசிகள் என்னைப் பிடித்து உண்டிருப்பார்களே'' என்று மந்திரி பதிலளித்தார்.

வ.செந்தாளன்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,சாவகச்சேரி.

## அரச இலச்சினை



அரச இலச்சினை என்பது உலகின் ஒவ்வொரு நாட்டினதும் தனித்துவமான அடையாளமாகும். அந்தவகையில், எமது நாட்டில் தற்போது பாவனையில் உள்ள அரச இலச்சினை 1972 ஆம் ஆண்டு எமது நாட்டின் பிரபல சிற்பத்துறை விற்பன்னர் எஸ்.எம்.செனவிரத்ன அவர்களால் வடிவமைக்கப்பட்டது.

எமது அரச இலச்சினையின் மத்தியில் வலது கையில் வாளேந்திய சிங்கத்தின் உருவம் காணப்படுகின்றது. அது வீரத்தைப் பறைசாற்றுகின்றது. அடுத்ததாக தர்மசக்கரம் நாட்டு மக்கள் தார்மீக வழியில் வாழ்வதை சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன், பூரண கும்பம் நாட்டின் பூரணத்துவத்தையும் வளத்தையும் அடையாளப் படுத்துகிறது. இரு மருங்கிலும் வடிவமைக்கப்பட்டுள்ள சூரியனும் சந்திரனும் நிலைக்கும் காலம் வரையில் இங்கு வாழும் இனங்களுக்கிடையில் ஒற்றுமையும் சகோதரப் பிணைப்பும் நிலவ வேண்டும் என்பதையும், முற்றிய நெற்கதிர்கள், இலங்கை ஒரு சௌபாக்கியமான பூமி என்பதையும் உணர்த்துகின்றன. தாமரை இதழ்கள் நாட்டு மக்களின் தூய்மையான உணர்வுகளை எடுத்துக்காட்டுகின்றது. எமது நாட்டின் அரச இலச்சினையைப் பொதுவாக நோக்கினால் அனைத்து இனங்களையும் சார்ந்த மக்கள் சமுதாயம், மனித நேயம், மனிதாபிமானம், மானிட ஐக்கியம், மானிட சமத்துவம், மனித நல்லுணர்வுகள் என அனைத்தையும் ஒன்றுபடுத்தி வலியுறுத்துகின்றது.

எம்.எம்.ஸுஹா, அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹபுகஸ்தலாவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நீர்வீழ்ச்சிகள்

இலங்கை உயிர்ப்பல்வகைமையை பரவலாகக்கொண்ட நாடாகும். அதற்காக இயற்கை தந்துள்ள கொடைகள் அளப்பரியது. இதில் மலைத் தொடர்ச்சிகள் இயற்கையின் வரப்பிரசாதமாகும். மலையில் இருந்து விழும் நீர்வீழ்ச்சி நாட்டின் உயிர்ப்பல் வகைமைக்கு உரமூட்டும் அதேவேளை, நாட்டின் வனப்பையும் மேம்படுத்தும் காரணியாக உள்ளது. இலங்கையில் உள்ள நீர்வீழ்ச்சிகளில் பெரும்பாலானவை மத்திய மலைநாட்டில் உற்பத்தியாகின்றன. சுற்றுலாப்பயணிகளுக்கு விருந்தளிக்கும் இந்த நீர்வீழ்ச்சிகள் மின்சக்தி தொழிற்துறைக்கும் உந்துசக்தியாக அமைகின்றன. இதற்கமைய, தற்போது இலங்கையில் 300 க்கும் அதிகமான நீர்வீழ்ச்சிகள் இனங்காணப்பட்டுள்ளன.


மலைநாட்டின் மேட்டு நிலங்களில் உற்பத்தியாகும் நீர்நிலைகள் கீழ்நோக்கி விழும்போது நீர்வீழ்ச்சிகள் உருவாகின்றன. உயரமான நீர்வீழ்ச்சியான பம்பரகந்த, குருத்து ஓயா, தியலும, கிரிந்தி எல்ல, லக்ஷபான, டெவோன், சென்கிளேயர், துன்கிந்த, எல்ஜின், ராவணா எல்ல, ஹுலுகங்கை, மாகெலி எல்ல ஆகியன இதில் பிரதான நீர்வீழ்ச்சிகளாகும். இந்த நீர்வீழ்ச்சிகள் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.

## பம்பரகந்த



இது இலங்கையின் நீளமான நீர்வீழ்ச்சியாகும். இதன் உயரம் 241 மீற்றர். கொழும்பு பண்டாரவளைப் பாதையில் களுபஹன பகுதிக்கு 4 மைல் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு செப்டெம்பர், ஒக்டோபர் காலப்பகுதிகளில் நீர்ப்பரப்பு அதிகமாக இருக்கும்.

## தியலும



இலங்கையில் மிகவும் பிரபல்யம் பெற்ற நீர்வீழ்ச்சியாக தியலும நீர்வீழ்ச்சி கருதப்படுகின்றது. இதன் உயரம் 220 மீற்றர். நீளத்தில் இரண்டாவது இடத்தினைப் பெறுகின்றது. இது பெரகல வெல்லவாயப் பகுதியில் அமைந்துள்ளது.

## லக்ஷபான நீர்வீழ்ச்சி




மஸ்கெலிய ஓயா காரணமாக இது உருவாகியுள்ளது. இதன் உயரம் 129 மீற்றர். நோட்டன் பிரிஜ் மஸ்கெலிய பாதையில் அமைந்துள்ள இந்நீர்வீழ்ச்சி, லக்ஷபான நீர்மின் நிலையத்தின்மூலம் பிரபல்யம் பெற்றுள்ளது.

## டெவோன்



இலங்கையின் முதலாவது வெளிநாட்டு கோப்பி பயிரிட்டாளரான டெவோனின் பெயரால் அழைக்கப்படும் இந்நீர்வீழ்ச்சி மிகவும் அழகானது. அவிசாவளை - நுவரெலியா பாதையில் 20 ஆவது மைல் கல்லில் இருந்து பார்க்கும்போது, மிகத் தெளிவாக இந்த நீர்வீழ்ச்சியைப் பார்க்கலாம். இதன் உயரம் 97 மீற்றர்.

## துன்ஹிந்த



உயரத்தில் 59 மீற்றர் கொண்ட இந்த நீர்வீழ்ச்சி பதுளை தல்தென பாதையில் பதுளைக்கு 4 கிலோமீற்றர் தூரத்தில் தல்தென எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இலங்கையின் மிகவும் அழகிய நீர்வீழ்ச்சியாக இந்த நீர்வீழ்ச்சி கருதப்படுகின்றது.

## சென்கிளயர்ஸ்



கொத்மலை ஆறு சென்கிளயர் நீர்வீழ்ச்சியினை உருவாக்குகின்றது. உயரம் 80 மீற்றராகும். இது இலங்கையின் அதிக அகலம் கொண்ட நீர்வீழ்ச்சியாகும். தலவாக்கலை நகரிலிருந்து 3 கிலோ மீற்றர் மேற்கில் அமைந்துள்ள இந்த நீர்வீழ்ச்சியில் தற்போது, கொத்மலை நீர்த்தேக்கம் காரணமாக, நீரோட்டம் குறைவாகவும் சிலவேளைகளில் அதிகமாகவும் காணப்படுகின்றது.


## பிரபலமான நீர்வீழ்ச்சிகள் சில (உயரம் மீற்றர்களில்)

போபத் நீர்வீழ்ச்சி - 30, பேக்கர்ஸ் 22, ஹுலுகங்க - 75, கல்தொட்ட தூவிலி நீர்வீழ்ச்சி - 40, லவர் லீப்ஸ் 30, சுரத்தலி நீர்வீழ்ச்சி - 60, குருந்து ஓயா - 189, தியலும - 220, மாபலான - 141, லக்ஷபான - 129, ஓலு நீர்வீழ்ச்சி - 127, துன்ஹிந்த நீர்வீழ்ச்சி - 59, கிரிந்தி எல்ல - 116, நம்பொட நீர்வீழ்ச்சி - 109, வட்டுன எல்ல - 108, தெமலி எல்ல - 105, மஹகிந்துர எல்ல - 102, ரதன எல்ல - 101, நக்காவிட்ட எல்ல - 100, கெரடி எல்ல - 100, கல்தொல எல்ல - 100, எலி ஹத்த -100, டன்சின் எல்ல - 100.

கவிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 வித்தியாசங்களில் X அடையாளமிடுக







தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.04.24 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 413
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## 5 ஆங்கிலச் சொல் தருக

1. விண்வெளி - ..............................
2. முத்து - ..............................
3. கட்டடம் - ..............................
4. வரிக்குதிரை - ..............................
5. பாலம் - ..............................

## 4 பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக


1. கா..........ல்.......ர் (ண/ன - னீ/நீ)
2. இ........க்க......ம் (ள/ழ/ல - ன/ண)
3. வம்சாவ........(ழி/லி/ளி)
4. பு......தி (ளு/ழு/லு)
5. செ........கோ........(ன்/ங் - ள்/ல்)

## 3 உரிய படத்துடன் இணைக்க


| | |
|---|---|
| cereal | pea |
| sky | fish |
| bee | cake |
| chair | face |
| fox | square |
| sit | rock |
| apple | puppy |
| fan | tiger |

## அறிவுக்கு விருந்து - 410 விடைகள்

**போட்டி: 02**



**போட்டி: 03**



**போட்டி: 04**

தா, தாம், தாது, தாள், தாரம், தாரணி, அதாவது, அவரது, அரவம், அவள், அது, அணி, எம், எது, எவரது, எள், வரம், துணி, துவரம், துள்

**போட்டி: 05**

1. கனவில் கண்ட பணம் செலவிற்கு உதவுமா?
2. சைகை அறியாதவன் சற்றும் அறியான்.
3. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் குழியாக்கும்.
4. அள்ளிக் கொடுத்தால் சும்மா; அளந்து கொடுத்தால் கடன்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 29

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | ■ |
| | ■ | | ■ | | ■ |
| | ■ | | | 3 | 4 |
| | | 5 | ■ | ■ | |
| | ■ | | 6 | ■ | |
| ■ | 7 | | 8 | | |

### மேலிருந்து கீழ்

01. உலக அறிவு என்றும் கூறலாம்.
02. வகுப்பறைகளில் காணலாம்.
03. சுவை. (தலைகீழ்)
04. கடை வீதி.
08. வாழ். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. தைத்திருநாளில் பொங்கப்படுவது.
04. இந்துக்கள் பூஜைக்கு இந்தப் புல்லைப் பயன்படுத்துவர். (மாறியுள்ளது)
05. ஒரு மிருகம். (மாறியுள்ளது)
06. குறைந்தளவிலான எண்ணிக்கையைக் குறிக்கப் பயன்படும் சொல். (மாறியுள்ளது)
07. 'தொடரூர்தி' என்றும் அழைக்கப்படுகின்றது.

## 2

ஒவ்வொரு பழவகையிலும் எத்தனை உள்ளன என்பதை கீழுள்ள கட்டத்தில் அந்தந்தப் பழங்களுக்கு அருகில் எழுதுக





## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 410 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
பா.பவித்ரா, கண்டி.

**போட்டி: 02**
எஃப்.ஷர்மிளா, திஹாரி.

**போட்டி: 03**
அ.அபிதாஜினி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

**போட்டி: 04**
மின்ஹாஜ் நஸார்டீன், தர்கா நகர்.

**போட்டி: 05**
ஆர்.ஆஸிர், நீரெல்ல, அக்குறனை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எம்.ஷஸ்னி, திருகோணமலை.
- த.அபிசாணுகன், புதுக்குடியிருப்பு.
- றெஜி செலர், காரைதீவு-10.
- எஃப்.பஸ்னா, தெல்தோட்டை.
- கி.கிருஷாந், மட்டக்களப்பு.
- எஸ்.ஹம்சியா, மினுவாங்கொடை.
- என்.மதுமதி, வவுனியா.
- அஹமட் றிப்தி, கல்கிசை.
- தி.ரம்யா, புசல்லாவ.
- எஃப்.ஆதிலா, கொழும்பு-10.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 28 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | 2 ரா | ம | 3 பி | ரா | ன் |
| 4 ம | ணி | ■ | சா | ■ | ■ |
| ய | ■ | ■ | 5 சு | 6 வா | 7 சி |
| 8 ம | 9 கு | டி | ■ | 10 க | ரி |
| லை | வ | 11 கூ | ■ | ன | ■ |
| ■ | ளை | ■ | 12 செ | ம் | பு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரசித்தி பெற்ற ஓவியர்கள் சிலர்....



எல்.டி.பி.மஞ்சுஸ்ரீ (1902-1982)

இவர் மேற்கு வங்காளத்தில் சாந்திநிகேதன் பல்கலைக்கழகத்தில் ஓவியம் கற்றவர் ஆவார். இலங்கையில் பல இடங்களில் அழிந்த நிலையில் அல்லது மங்கிய நிலையை அடைந்திருந்த ஓவியங்களைப் பிரதி செய்து உயிர்ப்பித்தவர்களில் மஞ்சுஸ்ரீ முக்கியமானவர். இவரின் கலைச் சேவைக்காக, 1979 இல் பிலிப்பைன்ஸ் நாட்டு ராமன் மக்சேசே விருது வழங்கப்பட்டது. கம்போடியா, தாய்லாந்து, சீயம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாட்டு ஓவியங்களையும் இவர் வரைந்துள்ளார். பிக்காசோவின் தன்மை இவரின் ஓவியங்களில் காணப்படுவதாக கூறப்படுகின்றது. இவரது முக்கியமான ஓவியங்களாக தாராதேவி, கண்ணாடிச்சிற்பம், கபிரிஞ்ஞா நடனம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



மஞ்சுஸ்ரீயின் ஓவியமொன்று

## எஸ்.பி. சார்ள்ஸ்



எஸ்.பி.சார்ள்ஸ்

இலங்கை நாடாளுமன்றத்தின் செங்கோலை நிர்மாணித்தவர், எஸ்.பி.சார்ள்ஸ் ஆவார். சுதந்திர சதுக்கத்தை நிர்மாணிப்பதிலும் இவரின் பங்கு முக்கியமானது. கலாசார முக்கோணப் பிரதேசத்தில் காணப்படும் சித்திரங்களைப் பிரதி செய்யும் வேலையை மிகவும் சிறப்பாக செய்துள்ளார். ஓவியக்கலை சம்பந்தமாக பல நூல்களையும் இவர் எழுதியுள்ளார். ஐக்கிய ராச்சிய நூதனசாலையில் இவரின் ஓவியங்க ள் சில இடம்பெற்றுள்ளன.

எஸ்.எல்.எம். மஹ்ரூஃப்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.முஃபிஸ்,
வெலம்பொட மு.ம.வித்.,
வெலம்பொட.



என்.இல்மா,
அல்-புர்கான் மு.ம.வித்.,
நமடகஹவத்த.



ஆர்.ஐக்ஷல்யா,
புனித கப்ரியல் ம.கல்.,



ஜெ.டிலக்ஷன்,
ஸ்ரீ கோணேஸ்வரா இந்.கல்.,
திருகோணமலை.



வி.பிரவிந்ரன்,
ஸ்ரீ.கதிரேசன் த.ம.வித்.,
தெரணியகலை.



ரெ.ருஷாந்தினி,
டயகம த.ம.வித்., டயகம.



சி.கதம்பவி,
சாவகச்சேரி இந்.கல்., சாவகச்சேரி.



ஜெ.பிரபாஜினி,
இந்து ஆரம்பப் பாட.,
புஸ்ஸல்லாவ.



எச்.ஆயிஷா,
ஸாஹிரா தேசிய பாட.,
மாவனல்லை.




சாரா ரிஸ்வி,
பெண்கள் உயர்தர பாட., கண்டி.





ச.கஜந்தன்,
விபுலானந்த ம.கல்., காரைதீவு.



கு.தனுஷன்,
சிவயோக சமாயம், திருகோணமலை.



கல்முனை நற்பிட்டிமுனை 01 ஐச் சேர்ந்த பரமநாதன்-மாலினி தம்பதியரின் செல்வப் புதல்வன் விகிருதன் தனது பதினோராவது பிறந்தநாளை 17.04.2013 ஆகிய இன்று கொண்டாடுகின்றார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



வட்டக்கச்சி கிளிநொச்சியைச் சேர்ந்த லிங்கமூர்த்தி-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வி சங்கிசை, தனது ஆறாவது பிறந்தநாளை 13.04.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: நந்தினி)



பேராதனிய அப்லன்சை சேர்ந்த சிவபெருமான்-விஜயசுந்தரி தம்பதியரின் செல்வப் புதல்வன் தினுஷ்ராஜி, தனது ஆறாவது பிறந்தநாளை 06.04.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

(தகவல்: பரமசிவம்)



வெலிகமவைச் சேர்ந்த ருஸ்தி-நதீரா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா நஸ்ரா பானு, தனது ஆறாவது பிறந்தநாளை 01.04.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ஆர்.எம்.நஸீர்)

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அவமானமடைந்த ஆள்பதி

படைகளைத் தயார்படுத்தும்படி ஆள்பதி கட்டளையிட்டார். தனக்கு ஏற்பட்ட அவமானத்தை இதன்மூலம் தீர்த்துக்கொள்ளலாம் என அவர் எதிர்பார்த்தார். கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம், அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள படைகள் அனைத்தையும் திரட்டிக் கண்டிக்கு அனுப்ப எண்ணினார். அதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்தியபோது, தளபதியாகிய டேவிட் டக்லஸ் அவர்களுக்கும் ஆள்பதி நோத் அவர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. இதனால் கண்டிப் பயணம் சிக்கலில் முடிந்தது. இதனை அறியாத தளபதி ஜோன்ஸ்டன் தமது படைகளைத் திரட்டிக்கொண்டு கண்டிக்குச் சென்றார். அப்படையணியை கண்ணுற்ற மன்னனும் மக்களும் பேரச்சம் கொண்டு கண்டியை கைவிட்டு, தப்பியோடினர். எனினும், ஜோன்ஸ்டன் ஏனைய படையணிகள் வரும் வரை காத்திருந்தார். அவர்கள் வரமாட்டார்கள் என்பதை அறிந்ததும் எவ்வித தாக்குதல்களையும் நடத்தாது அவர் தனது படையணிகளுடன் தந்திரமாகப் பின்வாங்கினார். இத்தகைய ஒரு செயலை இதற்கு முன் அசவிடோ மாத்திரமே மேற்கொண்டிருந்தார்.

இந்த யுத்த காலத்தில் சிங்களவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் உயிரிழப்புகளும் சேதங்களும் மாத்திரமே ஏற்பட்டன. பெரும் பணச் செலவை மேற்கொண்டு நிகழ்த்தப்பட்ட இந்த யுத்தங்களால் நோத் தனது நிம்மதியையும் மரியாதையையும் இழந்தார். வெற்றிகரமாக மேற்கொண்டு வந்த கைத்தொழில்களைக்கூட யுத்தம் காரணமாக இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், இவற்றை எல்லாம் சிந்திக்காமல் படைகளை மீண்டும் பலப்படுத்தினார். இதனால், சிங்கள மக்களிடம் மட்டுமல்ல ஆங்கிலேயரிடமும் அவர் மீதான நம்பிக்கையை இழந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தாரிணி.... எமது வயதை ஒத்த மூன்று பிள்ளைகள் மென்பானம் அருந்தியதனால், உடலில் விஷமேறி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நேற்றைய செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. பார்.... நாம் சாப்பிடும் , அருந்தும் உணவுகளிலும், பானங்களிலும் எவ்வளவு விஷம் இருக்கின்றது''*

*''எமது உணவு விடயங்களில் மட்டுமல்ல மாதவி, எமது வீடுகளில் உள்ள பெரும்பாலான உற்பத்திப் பொருட்களிலும் விஷப் பொருட்கள் உள்ளடங்கியுள்ளனவாம்''*

*''என்ன.... எமது வீடுகளிலும் அவை இருக்கின்றனவா?''*

*''ஆமாம்.... மாதவி, இங்கே பார் இல்லங்களில் நிகழும் விஷ அனர்த்தங்கள் பற்றி பத்திரிகையில் ஆக்கம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது''.*



# இல்லங்களில் நிகழும் விஷ அனர்த்தங்கள்

## திடீர் விபத்துக்கள்

அன்றாடம் பயன்படுத்தும் பெரும்பாலானவற்றில் உடலுக்கு கேடு விளைவிக்கும் விஷப் பொருட்கள் பல இருக்கக்கூடும். அதனால், விஷமடைதல் தொடர்பான அவசர விபத்துக்களைத் தடுப்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்தும் அதேவேளை, அவற்றுக்கு வழங்கப்படும் முதலுதவிகள் குறித்தும் அறிந்திருத்தல் அவசியமாகும்.

## விஷமடைவதனால்...

விஷமடைதல் போன்ற பாதிப்புகளினால் பெரும்பாலானவர்கள் வருடாந்தம் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர். இவர்களில் சிறுவர்,சிறுமியரே அதிகளவில் அடங்குகின்றனர். எனவே, விஷம் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படுவதனால் இந்த விபத்துக்களைக் குறைத்துக் கொள்ள முடியும்.

## வீடுகளில் பாவனையிலுள்ள பொருட்களில் விஷம் உள்ளடங்கியுள்ளவை

மருந்துவகைகள், கிருமிநாசினிகள், மலசலகூட சுத்தமாக்கி, நுளம்புச் சுருள், கற்பூர வில்லைகள், பற்றரிகள், பற்றரி அமிலம், மண்ணெண்ணெய் மற்றும் இதர எரிபொருட்கள், பெயின்ட் மற்றும் பொலிஷ் வகைகள், தளபாட பாதுகாப்பு பூச்சுகள், எலிக்கொல்லி, களைக்கொல்லி, பூச்சிக்கொல்லி, ஒட்டுப்பசை வகைகள், வாசனைத் திரவியங்கள், எயார் ஃப்ரெஷ்னர், பிரேக் ஒயில், (ச்)சோக் வகைகள்.

## விசேட கவனம் செலுத்தவேண்டும்

✱ குறித்த பொருட்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்.

✱ மருந்துகளை உரியவாறு உரிய காலநேரத்தில் உரிய அளவில் பயன்படுத்துங்கள். பயன்படுத்திய பின்னர் தேவையற்ற மருந்துகளையும் கொள்கலன்களையும் அப்புறப்படுத்திவிடுங்கள்.

## மருந்து வகைகள்

எந்தவொரு மருந்தையும் குறித்த கால அளவிற்கும் அல்லது தேவையான அளவிற்கு அதிகமாகவும் பயன்படுத்துவது உடலுக்கு கேடு விளைவிப்பதுடன், உடலில் விஷ ஆபத்துக்கள் ஏற்படவும் வழிவகுக்கும்.

## தாவரங்கள்



வீடுகளில் வளர்க்கப்படும் பூமரங்கள், செடிகள், காய் வகைகள், தாவர இலைகளினால் தயாரிக்கப்படும் உணவு வகைகள், விஷ ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடும்.

## பாம்புகள் மற்றும் இதர ஊர்வன

வீடுகளை சூழவுள்ள குப்பைகள், கற்கள், புதர்கள் மற்றும் நீர்நிலைகளில் பாம்புகள் இதர ஊர்வன என்பன நடமாடக்கூடும். பாம்பு தீண்டுவதனால் உடலில் விஷம் ஏறலாம்.



## கிருமிநாசினிகள் அல்லது களைக்கொல்லிகள்

✱ பலதரப்பட்ட களைக்கொல்லிகளை தனிப்பட்ட அலுமாரி ஒன்றில் பூட்டி வையுங்கள்.



✱ உணவுப் பானங்களுடன் சேர்த்து வைக்காதீர்கள்.

✱ அவற்றை முகர்ந்து பார்ப்பதையோ, சுவைத்துப் பார்ப்பதையோ தவிர்த்து விடுங்கள்.

✱ வெற்றுக் கிருமிநாசினி போத்தல்களை உணவுப் பொருட்களை இடுவதற்குப் பயன்படுத்தாதீர்கள்.

## உடலுக்குள் விஷமேறும் வழிகள்

வாய், சருமம், நுகர்தல், கண்களினால், ஊசிகளினால்

## உடலில் விஷம் கலந்தால் ஏற்படும் பொது அறிகுறிகள்

✱ வாயிலும், தொண்டையிலும் எரிச்சலுணர்வு.

✱ உதடுகள் மற்றும் வாய்ப் பகுதியில் எரிகாயங்கள் ஏற்படல்.

✱ வயிற்றுவலி.

✱ குமட்டல், வயிற்றோட்டம்.

✱ வாய், மூக்கு பகுதிகளூடாக சளி வெளியேறல்.

✱ சுவாசிக்க கடினமாயிருத்தல்.

✱ சருமத்திலும் கண்களிலும் எரிச்சலும் வேதனையும் ஏற்படல்.

✱ நாடித் துடிப்பு அதிகரித்தல் அல்லது குறைதல்.

✱ தலையிடி, வலிப்புத் தன்மை மற்றும் மயக்க நிலை.

## சருமத்தில் விஷம் பட்டுவிட்டால்



நோயாளியை துரிதகதியில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுங்கள். விஷம் கொண்ட ஆடைகளை அப்புறப்படுத்துங்கள். அவ்விடத்தை சவர்க்காரம் இட்டு நீரில் 15-20 நிமிடங்கள் கழுவுங்கள். துரிதகதியில் மருத்துவ ஆலோசனையைப் பெறுங்கள்.

## கண்களில் விஷம் பட்டால்

நோயாளியை துரிதகதியில் அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்துங்கள். பாதிக்கப்பட்ட கண்ணை சுத்தமான நீரில் கழுவுங்கள். துரிதகதியில் மருத்துவ ஆலோசனையைப் பெறுங்கள். கண்களைப் பாத்திரத்தினுள் உட்புகுத்தி கழுவுவதைத் தவிர்த்து விடுங்கள். கண்களில் வீக்கம் ஏற்பட்டால், சிவப்பானால் துரிதகதியில் மருத்துவ ஆலோசனையைப் பெறத் தவறாதீர்கள்.



## விஷத்தை சுவாசித்தால்



இதன்போது நோயாளியை அந்த இடத்தில் இருந்து அப்புறப்படுத்தி விடுங்கள். அதனால்,மேலும் விஷவாயு, சுவாசிக்கப்படுதல் தடுக்கப்படும். சுத்தமான காற்றை சுவாசிக்க இடமளியுங்கள்.

## விஷத்தை விழுங்கிவிட்டால்

✱ விஷத்தை விழுங்கிவிட்டால், வாந்தி எடுக்கச் செய்யாதீர்கள். உப்புநீர், மதுசாரம் அடங்கிய பானங்கள், சோடா, தேங்காய்ப்பால் என்பனவற்றை அருந்தக் கொடுக்காதீர்கள்.



✱ நோயாளிக்கு மயக்கம் ஏற்பட்டால், அவரை சரிவாகப் படுக்கவைத்து, முகநாடிப் பகுதியை சற்று உயர்த்துங்கள். (இதனால் சுவாசத் தடை ஏற்படாது).

✱ நோய்ாளியை மருத்துவமனைக்கு எடுத்து செல்லுங்கள். விஷம் இருந்த போத்தல், கொள்கலன் என்பனவற்றை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வது விஷ வகையை அறிந்து சிகிச்சை அளிக்க மருத்துவருக்கு இலகுவாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாரணர் இயக்கத்திற்கே உரித்தான முறைமையொன்று உள்ளது. அந்த முறைதான் சிறு வயதிலேயே, சிறுவர்களை சாரணியத்தில் இணைத்துக் கொள்ளும் முறையாகும். இவ்விடயம் சிறுவர் உலகிற்கு மட்டுமன்றி; அவர்களை மேம்படுத்த முன்வரும் சாரணத் தலைவர்

# எமது தனித்தன்மை





களுக்கும் மிக முக்கியமான விடயமாக உள்ளது. இத்தகைய பண்பை வெளிக்காட்டும் அம்சங்களில் சாரணர் சிறுவர்களுக்கு உரித்தான விசேட சீருடை, சின்னங்கள், பாடவிதானம், பரீட்சை, முன்னேற்ற அட்டைகள், அங்கத்துவ அட்டைகள், பாடல்கள், விளையாட்டுகள், கோஷங்கள், சான்றிதழ்கள், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளியிடுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறு குறியீடுகளை



அடிப்படையாகக்கொண்ட இந்த முறைமை 'Framework' எனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சாரணர் முறை என மாற்றமடைந்தது.

சாரணர்கள் ஒரே குழுவாக ஒரே பிரிவில் இணைந்து செயற்படுதல் முறையான ஓர் ஒழுங்கில் செயற்படுத்தப்பட்டது. குழுவின் சாரணர்கள் குருளைச் சாரணக் குழு, சாரணத் துருப்பு, திரிசாரண சமூகம் என பிரிக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, குருளைச் சாரணக் குழுவொன்றுக்கு ஆறு பேர் வீதம் ஆறு சாரணக் குழுக்கள் தோற்றம் பெற்றன. சாரணர் குழு ஒன்றிற்கு 6 முதல் 8 வரையிலான எண்ணிக்கையுடைய துருப்புகளாகப் பிரிக்கப்பட்டனர்.

## சாரணிய சீருடை

பொது வாழ்வில் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது சமூகத்தில் பலரும் பலவிதமான தொழில்கள் மற்றும் பதவிகளைக் கொண்டுள்ளனர். அவரவருக்குத் தனிப்பட்ட ரீதியில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் சாரணர் சமூகத்திற்கும் அவர்களை இலகுவில் இனங் கண்டுகொள்வதற்கென விசேடமான சீருடை வழங்கப்பட்டுள்ளது. சாரணியத்தில் அவர்களது சீருடை மிகவும் முக்கிய சின்னமாகும்.





சாரணியம் ஆரம்பித்த காலகட்டங்களில் பிரித்தானியாவில் அவர்களது நடைமுறைக்கேற்பவே சீருடைகள் வடிமைக்கப்பட்டன. ஆனாலும் பின்வந்த காலங்களில் நிறம் மற்றும் சீருடைக்கான வடிவங்களில் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. எனினும், பொதுவாக அனைத்து சாரணர்களாலும் பின்பற்றப்பட்ட பிரதான சாரணப் பண்புகள் சாரணர் சீருடையிலிருந்து நீக்கப்படவில்லை. அதுவே உலகின் எந்தவொரு நாட்டுப் பிரஜையும் எவ்வித சூழலுக்கு ஆக்கிரமிக்கப்பட்டாலும் 'தான் சாரணன்' என்பதிலிருந்து மாறமாட்டான். அவ்வாறான இயல்பே, அவன் ஒரு சிறந்த சாரணன் என்பதைக் காட்டிக்கொடுத்துவிடும். மேலும், ஒரு சாரணன் தனது சீருடையை அணிந்துகொள்ளும்போது, அதனைப் பெருமையாகவும் தான் மிகுந்த சுறுசுறுப்புடன் இருப்பதாகவும் உணர்கின்றான்.

சாரணச் சீருடையானது, சாரணிய பிரிவுக்கு அமைய வேறுபடும். உதாரணம்:


- ✱ குருளைச் சாரணர்
- ✱ சாரணர் ✱ திரிசாரணர்
- ✱ தலைவர் - தலைவி

ஆரம்பகாலக்கட்டத்தில் சாரணர்கள் பிரித்தானிய சம்பிரதாயத்திற்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட சீருடைகளையே உபயோகப்படுத்தியுள்ளனர். எனினும், பிற்பட்ட காலங்களில் கடும் காக்கி நிறத்திற்குப் பதிலாக, சாம்பல் நிறத்தைப் பயன்படுத்தியுள்ளனர். மேற்சட்டையின் கொலருக்குப் பதிலாக, டியனிக் கொலர் பாவனை ஆரம்பமானது. தலைவரது மேற்சட்டையின் தோல்பட்டிகளும் நீக்கப்பட்டன.

# பயனுள்ள முடிச்சுக்கள் சில...


ஒவ்வொரு சாரணனும் முடிச்சுக்கள் போடக்கூடியவனாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு முடிச்சையும் சுலபமாகப் போடலாம். அதில் சரியான வழியுமுண்டு. பிழையான வழியுமுண்டு. ஆனால், சாரணர் சரியான வழியில் முடிச்சுப் போடக் கற்றிருக்க வேண்டும். சரியான முறையில் முடிச்சுப் போடுவது, ஓர் உயிரைப் பாதுகாப்பதற்கு உதவுவதாகவும் இருக்கவேண்டும். தேவையானபோது, அம்முடிச்சுக்களை சுலபமாக அவிழ்க்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அந்தவகையில், ஒரு கயிற்றைக்கொண்டு அல்லது மெல்லிய நூலைக்கொண்டு முடிச்சுப்போடும் வகைகளும் சாரணருக்கு உபயோகமான வேறு பல முடிச்சு வகைகளும் இங்குள்ள படங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

**01. நேர் அல்லது சதுரக்கட்டு (Reef Knot)**




இது முதல் சிகிச்சையில் கட்டுக் கட்டுவதற்கும் கயிறுகளின் முனைகளைச் சேர்த்து முடிச்சிடுவதற்கும் உபயோகமாகும்.

**02. துணிக்கட்டு (Sheet Bend)**




ஒரே பருமனுள்ள அல்லது வித்தியாசமான பருமனுள்ள கயிறுகளை இணைப்பதற்கு இது உபயோகமாகும்.

**03. செம்படவர் முடிச்சு (Fisherman's Knot)**



இரண்டு ஈரமான கயிறுகளை அல்லது, நழுவும் தன்மையுள்ள கயிறுகளைக் கட்டுவதற்கு இது உபயோகமாகும்.

**04. முளைத்தும்புக் குழைச்சு (Clove Hitch)**




வழியாக்கல் வேலைகளில் கயிறுகளை மரங்களில்,கோல்களில் கட்டுவதற்கு இந்த முடிச்சு உபயோகமாகும்.

**05. ஒரு வளையமும் இரு ஒற்றைக் குழைச்சிகளும் (Round Turn & Two Half Hitches)**




ஒரு தூணுடன் அல்லது கம்பத்துடன் கயிறொன்றைக் கட்டுவதற்கு இது உபயோகமாகும்.

**06. மரமுடி (Timber Hitch)**




மரக்குற்றி அல்லது ஒரு கோலில் கயிறு நழுவாது நுனியைப் பலமாகப் போட்டுவைக்க இது உபயோகமாகும்.

**07. வளையக்கட்டு (Bow line)**




நழுவாத ஒரு வளையத்தை உடையதாக இருக்கும் இம்முடிச்சானது, ஆபத்தில் அகப்பட்டோரைப் பாதுகாக்கும் பொருட்டு உபயோகப்படுத்தப்படும்.

**08. இணைவரி முடிச்சு (Guy Line Hitch)**



இம் முடிச்சை தேவைக்கு ஏற்றபடி நீளமாக்கியோ, குறுக்கியோ போட்டுக் கொள்ளலாம்.

**09. உருளும் முடிச்சு (Rolling Hitch)**



முளைத்தும்புக் குழைச்சுக்கும் இணைவரி முடிச்சுக்களுக்குப் பதிலாக இம்முடி உபயோகப்படுத்தப்படலாம்.

*(முடிச்சுக்கள் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடுப்பிற்குக் கீழே செயலிழந்தவர்களை நடக்க வைக்கும் புதிய 'ரொபோ'

# Ekso Bionics

மனித உடலின் இடுப்பிற்குக் கீழுள்ள பகுதி செயலிழந்து, உணர்விழந்து காணப்படுபவர்களின் கவலையை தீர்ப்பதற்கு புதிய கண்டுபிடிப்பொன்று அறிமுகமாகியுள்ளது. அமெரிக்காவின் Ekso Bionics என்ற நிறுவனமே இந்த கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது, இந்த நிறுவனம் அறிமுகப்படுத்தியிருக்கும் 'எக்ஸோ' என்ற 'ரொபோ' உபகரணம் இவ்வகை நபர்கள் எழுந்து நின்று நடப்பதற்கு வழியமைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், இந்த 'எக்ஸோ' ரொபோ உபகரணத்தை குறித்த நபரின் இடுப்பிற்கு கீழ்ப்பகுதியில் பொருத்திக்கொள்ளவேண்டும். சாதாரணமாக காற்சட்டையொன்றை உடுத்துவதுபோல் மேற்படி ரொபோ உபகரணத்தை பொருத்திக்கொண்டாலே போதுமானது. இதன் பின்னர் இதிலுள்ள பற்றரியின் வலுவைக் கொண்டு உடம்பில் இயங்காத பகுதிகளை இயங்கச் செய்யக்கூடிய பணியை இது செய்யும். இத்தகைய நபர்களுக்கு மட்டுமன்றி மலை ஏறுபவர்கள் மற்றும் எடை கூடிய பொருட்களை சுமந்து செல்ல வேண்டியவர்கள் ஆகியோருக்கும் இந்த சாயலிலான ரொபோ உபகரணங்களை இந்த நிறுவனம் தயாரித்துள்ளது. இவ்வாறு ஒவ்வொரு தேவைக்கென தயாரிக்கப்பட்டுள்ள 'ரொபோ' உபகரணங்களைப் பற்றிப் பார்ப்போம்.

## ExoHiker

இது மலை ஏறுபவர்கள் தமது பொருட்களை சுமந்து செல்வதற்கு வசதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான வலுவை ஏற்படுத்துவதற்கு லிதியம் பொலிமர் பற்றரி மற்றும் சூரிய மின்வலு ஆகியன பொருத்தப்பட்டுள்ளன.



தகவல்களை தெரிந்துகொள்வதற்கு எல்.சீடி திரையொன்றும் இதில் உள்ளது.

பற்றரி ஒன்றின் நிறை இறாத்தலில் 1.2

ரொபோவின் உயரம் அடிகளில்.... 5.4/6.2

ரொபோவின் நிறை 31 இறாத்தல்

பொதுவான நேரம் மணிக்கு 2.5 கி.மீற்றர்

தூக்கக்கூடிய பாரம் 150 இறாத்தல்

## ExoClimber

எக்ஸோ ஹைக்கர் உபகரணம் மேலும் செயற்றிறன் கூட்டப்பட்டு, மலை ஏறுபவர்களின் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. லிதியம் பொலிமர் பெற்றரியின்மூலம் தேவையான சக்தியை இது பெறுகின்றது.



தகவல்களைப் பெறுவதற்கு வசதியாக 'எல்.சீடி' திரையொன்றும் இதில் உள்ளது.

150 இறாத்தல் பாரத்தை சுமந்துகொண்டு உயரத்திற்கு பயணிக்கக்கூடிய தூரம் 600 அடிகளாகும். 600

ரொபோவின் நிறை - 50 இறாத்தல்.

பொதுவான வேகம் - மணிக்கு 2.5 கி.மீற்றர்

சுமக்கக்கூடிய பாரம் - 150 இறாத்தல்

## HULC

போர்க்களங்களில் உள்ள இராணுவத்தினர் கூடிய பாரத்தை சுமப்பதற்கு வசதியாக இந்த ரொபோ உபகரணம் உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க இராணுவத்திற்கு உபகரணங்களை தயாரிக்கின்ற 'லொக்கீட்மாடின்' என்ற நிறுவனமும் இதற்கு அனுசரணை வழங்கியுள்ளது.



முன்புறம், பின்புறம் ஆகிய இரண்டு புறங்களிலும் பாரத்தை சுமக்கக்கூடிய வகையில் தாங்கக்கூடிய அமைப்பில் இந்த உபகரணம் அமைக்கப்பட்டுள்ளது.

அறிமுகமாகிய வருடம் 2009


ரொபோவின் நிறை - 50 இறாத்தல்

பொதுவான வேகம் - மணிக்கு 2 கி.மீற்றர்.

சுமக்கக்கூடிய பாரம் - 200 இறாத்தல்

## Ekso

உடலில் இடுப்பிற்கு கீழ்ப்பகுதி செயலிழந்து காணப்படுகின்ற நபர்களுக்கு நடந்து செல்வதற்கான ஆதாரமாக உருவாக்கப்பட்டுள்ளதே இந்த உபகரணமாகும்.



'எதிர்காலத்தில் காற்சட்டையாக இது பயன்படுத்தப்படும்'

ரஸ் என்கோல்ட் கண்டுபிடிப்பாளர் எக்ஸோ பயோனிக்ஸ்

இது அலுமினியம் மற்றும் டைட்டேனியம் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

பெறுமதி அ.டொலர் 140,000

இதற்கான வருடாந்த செலவு அ.டொலர் 10,000

பற்றரியின் ஆயுட்காலம் 06

நடக்கக்கூடிய வேகம் மணிக்கு கி.மீற்றர் 02

ரொபோ உபகரணத்தின் நிறை - இறாத்தல் 45

இதன் உயரம் இரண்டு அளவுகளில் உள்ளது.

அடி 5.2"

அடி 6.4"



இடுப்பிற்குக் கீழ் இயங்காத, நேராக நிமிர்ந்து நிற்க முடியாத ஒருவருக்கு Exso உபகரணம் உதவிகரமாக இருக்கும் காட்சி

மின் வலுவேற்றம் மற்றும் ரொபோ செயற்பாடுகளின் ஆதாரத்துடன், இந்த உபகரணம் செயற்படும்.

WIRED வயர்ட் சஞ்சிகையினால் 2010 ஆம் ஆண்டின் சிறந்த உபகரணமாகத் தெரிவு.

TIME டைம் சஞ்சிகையினால் 2010 ஆம் ஆண்டின் சிறந்த புதிய கண்டுபிடிப்பாகத் தெரிவு.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 17, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org